CASH FOR GOLD
R-GOLD
Mob: 93457 93457


# THE KOVAI HERALD

திி கோவை ஹெரால்டு

8th Anniversary Celebrations – The Kovai Herald

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2024-26 | Kovai / Tirupur | thekovaiherald.co.in | facebook.com/Thekovaiherald

Volume 8 | Issue 3 | English & Tamil Weekly | 08.06.2025 Sunday | 6 Pages | Price Rs.3/-


## எனக்கு சீட் இல்லையா? குமுறும் வைகோவால் திமுக கூட்டணியில் புகைச்சல்!

திி கோவை ஹெரால்டு



கடந்த 2021-சட்டமன்ற தேர்தலின் போது திமுக கட்சி காங்கிரஸ், மதிமுக, விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்தியயூனியன் முஸ்லிம் லீக், கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, மக்கள் விடுதலை கட்சி, ஆதித்தமிழர் பேரவை, மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்தித்தது. 2024 நாடாளுமன்ற தேர்தலில் இந்த கூட்டணியுடன் கமலின் மக்கள் நீதி மய்யம் இணைந்த நிலையில் திமுகவின் கூட்டணியில் மாற்றம் ஏற்படவில்லை. இந்தகூட்டணியில், இருந்த மதிமுகவுக்கு ஒரு மாநிலங்களவைஒதுக்கப்பட்டதால், வைகோ எம்.பி'யாக இருந்து வந்தார், அவரது பதவிக்காலம் வரும் ஜூலை 24ஆம் தேதியோடு முடிவடைய உள்ளது.

இந்ததேர்தலில்கூட்டணி கட்சியோன மதிமுகவிற்கு மீண்டும் ராஜ்சபா எம்.பி பதவி கிடைக்கும் வைகோ மீண்டும் எம்.பி ஆவார் என மதிமுகவினர் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

ஆனால் மதிமுகவுக்கு பதிலாக கமலின் மக்கள் நீதி மய்யத்துக்கு திமுக ஒரு தொகுதியை ஒதுக்கிவிட்டு மீதமுள்ள மூன்று தொகுதியில் திமுக வேட்பாளர்களை அறிவித்தது.

இது மதிமுகவினர் இடையேகடும்அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. சில தினங்களுக்கு முன் செய்தியாளர்களை சந்தித்த வைகோவின் மகன் துரை வைகோ, பல முறை நாடாளுமன்றம் சென்ற மூத்த தலைவர் வைகோவுக்கு வாய்ப்பு கொடுக்காதது மிகவும் வருத்தமளிப்பதாக கூறியிருந்தார்.

இந்த நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் திமுக மற்றும் கூட்டணி கட்சியான மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தனர்,

இந்த நிகழ்ச்சியில் கூட்டணி கட்சிகளான விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் தொல் திருமாவளவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் எம்.எல்.ஏ தளி ராமச்சந்திரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் என அனைவரும் கலந்து கொண்டனர்.

ஆனால் வேட்பு மனு தாக்கல் நிகழ்ச்சிக்கு மதிமுக சார்பில் யாரும் வரவில்லை. ஏற்கனவே மன வருத்தத்தில் இருப்பதாக துரை வைகோ கூறி இருப்பதை வைத்து பார்க்கும் போது திமுக கூட்டணியில் தொடர்ந்து மதிமுக நீடிக்குமா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

2026 சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் இதே கூட்டணி யோடு திமுக தேர்தலை சந்திக்கும் என்று எதிர்பார்க்கப்பட்நிலையில் ,வேட்பு மனுதாக்கல் நிகழ்ச்சியை வைகோ புறக்கணித்ததுகூட்டணியில் பிளவு ஏற்பட்டதாகவே பார்க்கப்படுகிறது.

## ரூ.4 ஆயிரம் கோடி செலவில் சபரிமலைக்கு ரயில் பாதை

### அங்கமாலி முதல் எருமேலி வரை 111 கி.மீக்கு அமைகிறது

திி கோவை ஹெரால்டு



பல ஆண்டு காலமாக சபரிமலைக்குரயில்பாதை அமைக்க வேண்டுமென மக்கள்கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில், சபரிமலைக்குரயில்பாதை அமைப்பது தொடர்பாக கேரள முதல்வர் பினராயி விஜயன், மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் மற்றும் கேரள மாநில ரயில்வே அமைச்சர் அப்துல்ரகிமான் ஆகியோர் ஆலோசனையில் ஈடுபட்டனர்.

கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. விரைவில் மத்திய ஆய்வுக் குழுவினர் கேரளா செல்ல வுள்ளனர். ஜூலை மாதத்திலேயே நிலம் கையகப்படுத் தப்படுத்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

கடந்த 1997-98ம் ஆண்டிலேயே அங்கமாலியில் இருந்து எருமேலி வரை 111 கி.மீ தொலைவுக்கு ரயில் பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டது. அங்கமாலியில் இருந்து காலடி வரை 7 கி.மீ தொலைவுக்கு ரயில் பாதையும் அமைக்கப் பட்டும் விட்டது.

கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் இதுவரை ரயில் பாதை அமைக்கப் பட்டதில்லை.சபரிமலைக்கு ரயில்பாதை அமைக்கப் பட்டால், இடுக்கி மாவட்ட மக்கள் ரயில் வசதியை பெறுவார்கள். சபரிமலை பக்தர்களுக்கு மிகவும் உதவிக்கரமாக இருக்கும். தமிழகத்திலுள்ள போடி நாயக்கனூர்தான் இடுக்கி மாவட்டம் அருகேயுள்ள ரயில் நிலையம் ஆகும்.

சபரிமலைக்குபிறநகரங்களை இணைக்கும் நேரடி இரயில் பாதை இல்லை, ஆனால், சபரிமலைக்கு அருகில் ஒரு சில இரயில் நிலையங்கள் உள்ளன. கோட்டயம், திருவல்லா மற்றும்செங்கன்னூர்ஆகியவை அருகிலுள்ள ரயில் நிலையங்கள் ஆகும், இவை சபரிமலையில் இருந்து சுமார் 90 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளன.

அதேபோல,திண்டுக்கல் - சபரிமலை ரயில் பாதை திட்ட ஆய்வுக்காக ரயில்வே நிர்வாகம் ரூ.46 லட்சம்நிதிஒதுக்கீடுசெய்துள்ளது. கேரளப்பகுதியில்புலிகள் சரணாலயம், முல்லை பெரியாறு அணை, அடர்ந்த வனப்பகுதிகள்உள்ளதால்2 கட்டங்களாகஇத்திட்டத்தை செயல்படுத்த முடி இந்த மாவட்ட மக்களின் நீண்டகாலகோரிக்கையாக திண்டுக்கல்-சபரிமலை ரயில்பாதைத்திட்டம்இருந்து வருகிறது. சபரிமலைபக்தர்கள் மட்டுமல்லாது, இடுக்கி மாவட்ட வர்த்தகர்கள், இரு மாநிலசுற்றுலாபயணிகளும் இத்திட்டம் மூலம் அதிகளவில்பயன்பெறுவர்.இதனால் இத்திட்டம் 25 ஆண்டுகளுக்கும்மேலாகவலியுறுத்தப்பட்டு வருகிறது.

இந்த இரு ரயில் பாதை திட்டங்களும் அமைக்கப்பட்டால், வர்த்தகம் பெருக வாய்ப்புள்ள நிலையில், முதல் கட்டமாக சபரிமலையில் ரயில் பாதை அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 4 ஆயிரம் கோடி செலவில் இந்த ரயில்பாதை அமைக்கப்படவுள்ளது.

இந்த ரயில் பாதை திட்டத்துக்காக மொத்தம் 303 ஹெக்டர் நிலம் கையகப்படுத்த வேண்டும்.

தற்போது, 24 ஹெக்டர் நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. அங்கமாலி, காலடி, பெரும்பாவூர், மூவாத்துபுழா, தொடுபுழா, கஞ்சிரப்பள்ளி ரோடு, எருமேலி உள்ளிட்ட 14 ரயில் நிலையங்களும் அமைக்கப்படவுள்ளது. எருமேலியில் இருந்து சபரிமலை 43 கி.மீ தொலைவில் உள்ளது. சபரிமலை விமான நிலையமும் இங்குதான் அமைக்கப்படவுள்ளது.

## சுவாமி விவேகானந்தர் பொன்மொழிகள்



- உனக்குத் தேவையான எல்லா வலிமையும், உதவியும் உனக்குள்ளேயே உள்ளன.
- உடல்பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.
- உன்னைநீயேபலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.
- நீஎதைநினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்;உன்னைவலிமைஉடையவன் என்றுநினைத்தால்வலிமை படைத்தவன் ஆவாய்.

LAKSHAKA TEX LIMITED

## அதிமுக கூட்டணியில் விஜய் அருண்ராஜுடன் எடப்பாடி பழனிச்சாமி பேச்சுவார்த்தை

திி கோவை ஹெரால்டு





வரும் சட்டமன்ற தேர்தலில் தேமுதிக, தவெக உள்ளிட்ட கட்சிகளை எல்லாம் சேர்த்துதான் 2026 சட்டமன்ற தேர்தலில் மெகா கூட்டணியை அமைக்கப்போவதாக எடப்பாடி பழனிச்சாமி கூறியிருந்தார். அந்த மெகா கூட்டணி இப்போது கூடிவரும் நிலையில் இருக்கிறது என்கிறார்கள்.

பலம் வாய்ந்த கூட்டணி அமைய வேண்டும். இதற்காக விஜய் எல்லாம் வரவேண்டும் என்று தமிழிசை உள்ளிட்ட பலரும் மீடியாக்கள் மூலமாக கூறி வந்தனர். தமிழக பாஜக தலைவர் நயினார்நாகேந்திரனும் மீடியாக்கள் மூலமாக அழைப்பு விடுத்திருந்தார். தன் அழைப்புக்கு விஜய்யிடம் இருந்து நல்ல பதில் வரும் என்று நம்பிக்கையுடன் இருப்பதாக அவர் வெளிப்படையாகவே அறிவித்திருக்கிறார்.

ஆரம்பத்தில் தவெக வைத்த சில நிபந்தனைகளால் அதிமுக தவெக கூட்டணி ஏற்படவில்லை. ஆனால் இந்தமுறை நடைபெறும் பேச்சு வார்த்தையில் அது கூடிவிடும் என்கிறார்கள். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த எடப்பாடி பழனிசாமி சமூகத்தைச் சேர்ந்த அருண்ராஜ்தான் தவெக சார்பில் பழனிசாமியிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறாராம்.

இந்த பேச்சு வார்த்தையில் சுமூக உடன்பாடு ஏற்படும் என்று தெரிந்துதான் விஜய்யிடம் இருந்து பதில்வரும் என்றுநம்பிக்கையுடன் தெரிவித்திருக்கிறார் நயினார். விரைவில் அமித்ஷாவை சந்திக்க இருக்கிறார் விஜய் என்றும் தகவல் பரவுகிறது.

மாநிலங்களவைசீட் இப்போது அதிமுக கொடுக்காவிட்டாலும் கூட்டணியை விட்டு வெளியேறும் முடிவில் இல்லை தேமுதிக. அதற்கு காரணம் பாஜக என்கிறார்கள். அதே போல் பாமகவும்கூட்டணியில்இருப்பதை உறுதிசெய்துள்ளதாக தெரிகிறது.

## நடிகர் கமல்ஹாசனுக்கு 305 கோடி சொத்து ; 50 கோடி கடன்

திி கோவை ஹெரால்டு



மக்கள் நீதி மய்யம் தலைவரும், நடிகருமான கமல்ஹாசனின் சொத்து விவரங்கள் வெளியாகியுள்ளன. ராஜ்யசபா தேர்தலில் போட்டியிடும் கமல்ஹாசன் நேற்று தமது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். அதில் தனது சொத்து விவரங்களை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் காலியாகவுள்ள 6 மாநிலங்களை பதவியிடங்களுக்கான தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. நடிகர் கமல்ஹாசன் உள்ளிட்ட 6 வேட்பாளர்கள் பிரமாண பத்திரத்தில் தாக்கல் செய்த மனுவில் சொத்து மதிப்பு வெளியாகியுள்ளது.

கமல்ஹாசன் தமக்கு 2023-24-ஆம் நிதியாண்டில் ரூ.78.90 கோடி வருவாய் கிடைத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அசையும் சொத்துகளின் மதிப்பு ரூ.59.69 கோடி. ஒட்டுமொத்த அசையா சொத்துகளின் இப்போதைய சந்தை மதிப்பு ரூ.245.86 கோடி. கடனாக ரூ.49.67 கோடி உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

சென்னை ஆழ்வார்பேட்டை, உத்தண்டி, சோழிங்கநல்லூர் ஆகிய இடங்களில் மொத்தம் 4 வணிகக் கட்டிடங்களை அவர் வைத்திருக்கிறார். இவற்றின் மொத்த சந்தை மதிப்பு ரூ.111.1 கோடி. திண்டுக்கல்லில் உள்ள வில்பட்டி கிராமத்தில் ரூ.22.24 கோடி மதிப்புள்ள விவசாயநிலமும் கமலுக்கு உள்ளது. மேலும், கமல்ஹாசன் கையிருப்பில் உள்ள ரொக்கம் ரூ.2.60 லட்சம். மகேந்திரா பொலிரோ, பென்ஸ், பி.எம்.டபிள்யூ., லக்சஸ் ஆகிய 4 கார்கள் உள்ளன. இவற்றின் ஒட்டுமொத்த மதிப்பு ரூ.8.43 கோடி என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்த சொத்துமதிப்பு ரூ.305.55 கோடி என்று கமல் குறிப்பிட்டுள்ளார். கமலின் வருமானம் 2019-2020 ஆம் ஆண்டில் ரூ.22.1 கோடியாக இருந்த நிலையில், தற்போது ரூ.78.9 கோடியாக உயர்ந்துள்ளது .




THE KOVAI HERALD
June 8, 2025 - Sunday

## Asia Jewels Show at Coimbatore

Asia Jewels Show 2025, One of South India's Glamorous & Niche Jewelry Exhibition & Sale is hosting its 54nd edition in Coimbatore city at The Residency Towers Hotel, Avinashi Rd, Coimbatore from 13th to 15th June 2025, Time 10.30 to 8 pm.

Asia Jewels Show is a niche event exhibiting exclusive and high-end Fine branded gold and diamond Jewellery among others. The event showcases some of the latest collections from, Fine gold Jewellery, Diamond Jewellery, Platinum Jewellery, Traditional Jewellery, Wedding Jewellery, Antique, Precious stone Jewellery, Kundan, Jadau & Polki & Silver Jewellery to name a few.

On display are Luxury Jewellery designs from top leading brands of Bangalore, Mumbai & Delhi, Jaipur, Hyderabad, Chennai & Coimbatore.




THE KOVAI HERALD

Until recently the scientific community believed that everything has happened because of the Big Bang. But now some are saying, "It was not just one, many bangs must have happened." It has been held that some billions of years ago, this particular Bang happened, which has resulted in all these planets and this universe. But now they are saying this Bang is not the only one.

It was amusing for me to hear this because these theories are beginning to sound just like yogic lore, something that we have always known from within. In the yogic system, we do not believe that you can ever go out into the existence and find out everything that is there a belief which scientists have also come to. When the scientist says it is an endless universe, he is obviously saying you can never find out what it is. You can never travel from end to end and say, "Okay, this is existence." This is something that has been said thousands of years ago.

And so, the best way to know this existence is by turning inward. Whatever has happened in the existence, all of it is in some way recorded in this mini-universe, the body.

Let me tell you how yoga explains creation from within. This is a dialectical culture. Because it is speaking about a dimension which is not in our logical perception, it is best to speak in dialectical ways.

Shiva is sleeping. When we say "Shiva" here, we are not talking about a person or the yogi. "Shiva" here refers to "that which is not"; that which is nascent. "That which is not" can only sleep.

As Shiva sleeps, Shakti comes looking for him. She wants to dance and play with him. Initially, he does not wake up. After some time, he does. Anyone who is in deep slumber, if you wake him up, he will get a little angry. If you were in deep sleep and someone came and nudged you, it would not matter how beautiful that person was, you would get angry. So he gets angry, roars and rises. That is why his first form and his first name is Rudra. The word "Rudra" means one who roars.

I asked a cosmologist, "If there is a series of Bangs, could it be a roar? Was it just one bang or was it a continuous thing?" He thought about it and said, "It cannot be just one, it must have been longer than just one moment." And I said "Why are you calling it a Bang? It is a Roar, isn't it?" If you ever drive a motorcycle without the silencer, you will see it will go "bang, bang, bang," but if you throttle up, it will roar. A roar is a composite expression of many bangs. What is being perceived now in a phenomenally roundabout way was perceived a long time ago. Every human being can perceive this if they look deep enough.

## Prizes distributed to winners of All India Basketball Tournament




THE KOVAI HERALD

Coimbatore District Basketball Association has been successfully conducting the All India Basketball Tournament for Men for the past 57 years and for women for the past 21 years. This year, these tournaments are scheduled from 28th May 2025 to 1th June 2025. Eight leading Men & Women teams of the country participated in the tournament.

The winner team Indian Bank (79) of the All India Basketball tournament was awarded with Rs 1 lakh cash besides 58th Nachimuthu Gounder Cup for men and the runner team Indian Air Force (67) was given Rs 50,000 and Dr N Mahalingam trophy while the third place winner Indian Navy (73) team was given Rs 20,000 and the fourth winner Income Tax (56) with Rs. 15,000. The Best player Award was won by Pranav Prince of Indian Bank Team.

In women's team, the winning team KSEB (91) was given Rs 50,000 and CRI Pumps trophy while the runner up team South Western Railway (51) with Rs 50,000 and trophy while the third winners Income Tax (72) team with Rs 20,000 and the fourth winner South Central Railway (57) team with Rs. 15,000. Srikala of KSEB was awarded with the best player award. Manickam, Chairman, Sakthi Group was the Chief Guest at the Prize Distribution function and gave away the prizes to the winners and runners.

## ZF Group inaugurates its 19th plant in Coimbatore




ZF Group takes a significant step forward in its commitment to India's growth with the grand inauguration of its manufacturing plant in Coimbatore, Tamil Nadu, catering to the construction and railways segment.

This facility will play a critical role in pioneering innovative solutions for construction equipment segments and railways in India for domestic markets and also grow exports as a hub for manufacturing for ZF Group's global customers.

Dr. Peter Laier, Member of the ZF Group Board of Management, and Head Commercial Vehicle Solutions and Industrial Technology, Akash Passey, President, ZF Group India, Andreas Moser, EVP Industrial Technologies, ZF Group were present during the occasion.

## World No Tobacco Day Programme at Nehru College of Nursing & Research Institute



THE KOVAI HERALD

The Nehru College of Nursing and Research Institute observed World No Tobacco Day with a mission to raise awareness about the harmful effects of tobacco and advocate for a healthier, tobacco-free future. The event witnessed an enthusiastic participation of over 150 members, including students, faculty, staff, and esteemed dignitaries.

Dr. Fuela Esther Thangam, Principal Nehru College of nursing and Research Institute, Coimbatore welcomed the gathering. Dr. P. Krishnakumar, CEO & Secretary of the Nehru Group of Institutions, graced the occasion. Dr. K. Narayanasamy, Vice Chancellor of The Tamil Nadu Dr. M.G.R. Medical University was the Chief Guest.

The program included Awareness talks, educational presentations, and interactive sessions on the dangers of tobacco use. A pledge ceremony where all attendees committed to spreading awareness and supporting a tobacco-free society.

## Renaatus Procon announces expansion plans




THE KOVAI HERALD

Renaatus Procon, announced the introduction of its new product, its expansion strategy and growth plans for the next 5 years, in Coimbatore.

Venkatesh Pakkala, Chief Operating Officer, Manickavasagam, President -Technical, Selvasundaram, Chairman & managing Director, Renaatus Group addressed the press and media in this regard.

The construction sector products offered by the company includes Renacon AAC Blocks, Renacon Rapid Wall ( precast wall panels), Wide range of Dry Mix Products, Tile Adhesives, wall putty, AAC Joint Mortar, Ready Mix Plaster, Block Jointing Mortar and Floor Top Hardener.

## Rotary Club of Coimbatore Downtown and Vakman Developers Collaborate to Enhance Road Safety




THE KOVAI HERALD

The Rotary Club of Coimbatore Downtown, in partnership with Vakaman Developers India Private Limited handed over a series of traffic barricades to the Coimbatore City Traffic Police.

This initiative is part of the Rotary Club of Coimbatore Downtown's ongoing Traffic Awareness Program, conducted in collaboration with the Coimbatore City Traffic Police. The program aims to foster a culture of responsibility and safety on the roads. Previous efforts have included recognizing vigilant citizens as "Traffic Heroes," organizing stress-relief sessions for police inspectors, and providing medical assistance to injured officers.

The newly installed barricades are strategically placed along ANAIKATTI ROAD, a stretch notorious for accidents due to rash driving. Rtn. PHF K. Vasudevan, Director of Vakaman Developers and Project Chairman and Deputy Commissioner of Police, Ashok Kumar were present on the occasion. The event was attended by Rtn. PHF Sumit Kumar Prasad, President of the Rotary Club of Coimbatore Downtown, Rtn. PHF S. Vikram Kumar, Secretary, club members, and senior police officials, all demonstrating their collective commitment to public safety.

## Kumaraguru Institutions Launches YALI 4.0




THE KOVAI HERALD

Kumaraguru Institutions launched YALI 4.0, the latest version of India's pioneering student-built energy boat, marking a significant leap in sustainable marine innovation.

Designed and developed by Team Sea Sakthi (TSS), an interdisciplinary student team from Kumaraguru, YALI 4.0 is set to represent India once again at the prestigious Monaco Energy Boat Challenge (MEBC) — for the fourth consecutive year.

TSS will take part in MEBC which is scheduled between 02 - 05 July 2025 at Monaco.

Another innovation by the students of Kumaraguru College and the introduction of robotic technology devices that will participate in an international robotics competition took place on the college campus. These two innovations were unveiled at the event by special guest Commodore Balasundaram of the Indian Navy.

## Auxilo Finserve Launches 'IndiaEd'

THE KOVAI HERALD



Auxilo Finserve, India's education focussed NBFC, has announced the launch of 'IndiaEd', an interest-free school and tuition fee financing solution. Designed to reshape how education is funded in India, IndiaEd addresses the growing financial challenges faced by students and educational institutions alike.

Anand Subramaniam, Chief Business Officer Domestic Loans, Auxilo Finserve made the announcement of the launch. Key Features of IndiaEd Institutional Partner Model are it covers full spectrum of educational expenses such as School tuition, undergraduate/postgraduate fees, competitive exam preparation, upskilling, and vocational training, Fees ranging from ₹20,000 to ₹10,00,000, customizable repayment terms starting from 3 months to 72 months (6 years), completely digital and paperless loan processing, instant disbursals to partnered institutions, ensuring real-time financial support.

## Air Marshal PK Ghosh, Air Officer-in- Charge Administration visits Air Force Administrative College




Air Marshal PK Ghosh, Air Officer-in-Charge Administration and Commodore Commandant of AFAC, visited Air Force Administrative College. The Air Officer was received by Air Commodore Vikas Wahi, Commandant, AFAC. A guard of honour was presented to the Air Marshal followed by a briefing about the station activities. He was briefed on steps taken by the station towards improving the quality of life and living standards of the station personnel. During the course of his visit, the Air Marshal visited facilities and important installations, and reviewed training activities.

During his interaction with the air warriors, he complimented them for their professionalism and exhorted them to maintain their vigil to guard the nation's skies.

## Dr. N.G.P. Institute of Technology Hosts National Conference on Electric Vehicles and Charging Infrastructure

THE KOVAI HERALD



Dr. N.G.P. Institute of Technology, Coimbatore, in collaboration with the Indian Council of Social Science Research (ICSSR), successfully organized a one-day National Conference titled "The Scope and Adoption of Electric Vehicles and Public Charging Station Infrastructure for a Sustainable Bharat." This event was part of the ICSSR-funded project "Vision Viksit Bharat @ 2047," focusing on the effectiveness and acceptance of electric vehicles (EVs) and related infrastructure policies.

Eminent chief guests included Dr. Deepak Kumar, Centre Head of CART, IIT New Delhi, and Dr. C. Bharathiraja, Centre Head of Electric Mobility, SRMIST Chennai. Dr. Franklin John Selvaraj, Head of Management Studies delivered the welcome address, and Dr. S.U. Prabha, Principal of Dr. NGPiTECH, offered opening remarks. The presidential address was given by Dr. Thavamani D Palaniswami, Secretary of Dr. NGPiTECH, Coimbatore. The conference included paper presentation tracks, best paper awards, and concluded with a vote of thanks by Dr. M.S. Kamalesh.

## ஸ்லீப்பர் பெட்டிகள் குறைப்பு: சேரன், நீலகிரி ரயில்களில் தெற்கு ரயில்வே முடிவு

தெற்கு ரயில்வேயின் முக்கிய விரைவு ரயில்களில் ஸ்லீப்பர் பெட்டிகள் குறைக்கப்படும் என்ற அறிவிப்புக்குப்பிறகு,பரவலான எதிர்ப்புகள் எழுந்துள்ளன. குறிப்பாக சேரன், நீலகிரி மற்றும் திருவனந்தபுரம் மெயில் ரயில்களில் இந்த மாற்றம் திட்டமிட்டபடி அமலில் இருக்கும் என தெற்கு ரயில்வேஉறுதியளித்துள்ளது. இது பயணிகளிடம் பெரும் அதிர்ச்சிமற்றும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.



இந்திய ரயில்வே என்பது நாடு முழுவதும் மக்களின் முக்கிய போக்குவரத்து ஊடகமாக உள்ளது. தினசரி லட்சக்கணக்கானோர் ரயிலில் பயணிக்கின்றனர். பண்டிகை மற்றும்விடுமுறைகாலங்களில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாகிறது. ஸ்லீப்பர் பெட்டிகள் பொதுமக்கள் மத்தியில் பெரும் தேவை உள்ள பிரிவாகவே இருந்து வந்தாலும், அண்மையில் சில ரயில்களில் அவை குறைக்கப்பட்டு,ஏசிபெட்டிகள் அதிகரிக்கப்படுகின்றன.

சேரன் எக்ஸ்பிரஸ் (சென்னை-கோயம்புத்தூர்), நீலகிரிஎக்ஸ்பிரஸ்(சென்னை-மேட்டுப்பாளையம்), திருவனந்தபுரம் மெயில், சென்னை-மங்களூரு,திருச்சி-ஹவுரா,நெல்லைஎக்ஸ்பிரஸ், பொதிகை எக்ஸ்பிரஸ், நாகர்கோவில்-மும்பை, கன்னியாகுமரி-புதுடெல்லி உள்ளிட்ட பல ரயில்களில் ஸ்லீப்பர் பெட்டிகள் தலா 1 அல்லது 2 குறைக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மூன்றாம் மற்றும் இரண்டாம் வகுப்பு ஏசிபெட்டிகள் இணைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கடுமையாகஎதிர்ப்புதெரிவித்த நிலையில், நெல்லை மற்றும் பொதிகை எக்ஸ்பிரஸ் ரயில்களில் மட்டும் ஸ்லீப்பர் பெட்டிகள் குறைக்கும் திட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவை மதுரை எம்.பி. சு. வெங்கடேசன் வரவேற்று, மற்றரயில்களிலும் இதேபோல் மாற்றத்தை திரும்பப்பெற வலியுறுத்தியுள்ளார்.

“ரயில்களில் ஏற்கனவே 12 ஸ்லீப்பர் பெட்டிகள் இருந்தாலேடிக்கெட்கிடைப்பது சிரமமாக உள்ளது. இப்போது 9 அல்லது 10 பெட்டிகள் மட்டுமே இருப்பதால், மேலும் குறைக்கும் முடிவு பயணிகளுக்கு பெரும் நெருக்கடியாக இருக்கும்,” என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தெற்கு ரயில்வே, சில ரயில்களில் ஏசி வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த மாற்றங்களை மேற்கொள்ளும் நிலையில், சாதாரண பயணிகளின் தேவைகளை புறக்கணிக்கக் கூடாது என்பது பயணிகள் மற்றும் சமூக ஆர்வலர்களின் முக்கியக் கோரிக்கையாகியுள்ளது.

## எண்ணும் எழுத்தும் திட்டம் - ஜூன் 9 முதல் ஆசிரியர்களுக்கு பயிற்சி

தமிழகஅரசுமற்றும்அரசுஉதவிபெறும் பள்ளிகளில், 2022-23ம் கல்வியாண்டில் முதல் செயல்படுத்தப்பட்டு வரும் “எண்ணும் எழுத்தும்” திட்டம், 2025-27ம் கல்வியாண்டு வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய ஐந்து பாடங்களுக்கான முதல்பருவத்பாடப்பொருள்உருவாக்கும் பணிகள் தற்போது முடிவடைந்துள்ளன.

இந்நிலையில், முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களுக்கும், முதல் பருவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிய அளவில் பயிற்சிவழங்கும் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தபயிற்சிஜூன் 9 முதல் 13ம் தேதி வரை நடைபெறும் என பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக, மத்திய அளவில் ஆசிரியர்களை குழுக்களாகப் பிரித்து பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது. இதற்கான காலப்பகுதியில், தற்காலிக மாற்று ஆசிரியர்கள்மூலம் வகுப்புகள்நடத்தப்பட வேண்டும் எனவும், அவசியமான செலவுகளை ஆண்டு பராமரிப்பு நிதியில் இருந்து எடுத்துக் கொள்ளலாம் எனவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

## விஜய் இளம்பெண்களை கட்டிபிடித்தார் என்று சொன்னேனா? -வேல்முருகன் பாய்ச்சல்

கடந்தசிலநாட்களுக்கு முன்பாகசேலத்தில்பேசிய வேல்முருகன், சினிமா நடிகர்களை மாணவிகள் கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க அனுமதிப்பதா தமிழர்கலாச்சாரம்?போயஸ் கார்டனில் நடிகனின் தரிசனத்துக்கு காத்திருப்பதால்வீட்டில்உலைவெந்து விடுமா?” என்று நடிகர்கள் ரஜினிகாந்த், விஜய் ஆகியோரை கடுமையாக விமர்சித்திருந்தார். வேல்முருகனின் இந்த பேச்சுக்குதவெகொள்கை பரப்புஇணைச்செயலாளர் தாஹிரா கண்டனம் தெரிவித்திருந்தார்.



இதுதொடர்பாக, கடலூரில் வேல்முருகன் கூறுகையில்,விஜய்கட்சியை தொடங்கியபோது ஒரு தமிழனாக அந்த கட்சியை நான் வரவேற்றேன்.

ஆனால், எடுத்தவுடன் நான் சட்டமன்றத்திற்கு செல்வேன் என்ற அறிவிப்பில் எனக்குஉடன்பாடில்லை. 10 ஆண்டுகள் மக்களுக்கு சேவை செய்துவிட்டு தேர்தலில் நிற்கலாம் என்று அரசியல் ரீதியான விமர்சனங்களை முன்வைத்தேன்.

சேலம் கூட்டத்தில் பல இளம் பெண்கள் சினிமா கதாநாயகர்களையே தங்களுக்கான அவதார புருஷர்களாக நினைத்துக்கொண்டு, அவர்களைகட்டிப்பிடிப்பது, முத்தமிடுவது பெற்ற தாய் தந்தையரின் முன்னிலையில் அதுபோன்று அநாகரிக செயல்களில் ஈடுபடுவது ஏற்புடையதல்ல என்று சொன்னேன்.

அதேபோல, காமராஜரோடு விஜய்யை ஒப்பிட்டு பேசுவது ஏற்புடையது அல்ல என்று பேசினேன். ஒரு மணி நேரம் 40 நிமிடம் பேசிய என்னுடைய உரையை முழுமையாக கேட்காமல், சில அரைகுறை வேக்காடுகள் எங்கள் தளபதி பற்றி பேசிவிட்டாய் உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அறிக்கைவிடுவதுஎல்லாம் வேண்டாம்.இதையெல்லாம் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

விஜய் இளம்பெண்களை கட்டிப்பிடித்து முத்தமிட்டார் என்று நான் பேசவில்லை. நான் சொல்லாத ஒன்றை சொல்லியதாகநீங்கள்எப்படி எடுத்துக்கொள்ளலாம். எங்கள் கட்சியினரை நேற்றைக்கு பெய்த மழையில் இன்றைக்கு முளைத்தகாளான்கள்பேச விஜய் அனுமதிக்ககூடாது.

என் மீது ஆட்சேபனை இருந்தால், விஜய் பத்திரிகையாளர்களை சந்தித்து கேள்வி கேட்கட்டும்”என்றுதெரிவித்தார்.

## 2022 மற்றும் 2023 தமிழக அறிவியல் அறிஞர் விருது தேர்வானா 24 பேருக்கு பரிசுத் தொகையுடன் கௌரவிப்பு

தமிழக அறிவியல் அறிஞர் விருது பெறுவதற்காக 2022 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கான பட்டியலில் 24 பேர் தேர்வாகியுள்ளனர். தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றம் மூலம் வழங்கப்படும் இவ்விருது, மாநில அறிவியல் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்தோர் கௌரவிக்கப்படுகின்றனர்.

இந்த விருது 1993ம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டு வரும் நிலையில், வேளாண்மை அறிவியல், உயிரியல், வேதியியல், சுற்றுச்சூழல், பொறியியல், கணிதம், மருத்துவம், இயற்பியல், சமூகவியல் மற்றும் கால்நடை அறிவியல் ஆகிய 10துறைகளில் வழங்கப்படுகிறது.

2022ம் ஆண்டுக்கான விருதுக்கு 73 விண்ணப்பங்கள் மற்றும் 2023-க்கான விருதுக்கு 96 விண்ணப்பங்கள் வந்தன. இவைகளை ஆய்வு செய்த தேர்வு குழு, ஒவ்வொரு ஆண்டிற்கும் 12 அறிவியலாளர்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.

2022ம் ஆண்டிற்கான விருது பெற்ற முக்கிய நபர்கள்:

மருத்துவம்: டாக்டர் எ. தேரணிராஜன் மருத்துவக் கல்வி கூடுதல் இயக்குநரும், சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் ராஜீவ் காந்தி மருத்துவமனை முன்னாள் முதல்வர்.

வேளாண்மை: பேராசிரியர் மா. ஆறுமுகம் பிள்ளை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்.

வேதியியல்:பேராசிரியர் த.சங்கீதா அண்ணா பல்கலைக்கழகம்.

சமூகவியல்:பேராசிரியர் ம. தமிழரசன் சென்னை பல்கலைக்கழகம்.

2023ம் ஆண்டிற்கான விருது பெற்ற முக்கிய நபர்கள்:

வேளாண்மை: இரா. தங்கவேலு ஐசிஏஆர் தேசிய ஆராய்ச்சி மையத்தின் முதன்மை அறிவியலாளர்.

சுற்றுச்சூழல் அறிவியல்: பெ. வரலட்சுமி மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்.

கால்நடை அறிவியல்: செள. சதீஷ்குமார் கால்நடை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்.

விருதுபெறும்ஒவ்வொருவருக்கும் ரூ.50,000 பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, அறிவியல் மற்றும் கல்வித்துறையை சேர்ந்தோர், மாநில அரசு அறிவியலாளர்களின் பங்களிப்பை பாராட்டும் விதமாக விருதுகளை வழங்குவது வரவேற்கத்தக்கது எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## சீருடையில் சமூக வலைதள பதிவு செய்ய தடை காவல்துறையினருக்கு கடும் உத்தரவு

சமூகவலைதளங்களில் காவல்துறையினர் சீருடையில் தோன்றும் புகைப்படங்கள், வீடியோக்களை பதிவிடக் கூடாதுஎனகாவல்துறையின் உயர் அதிகாரிகள் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

தமிழ்நாடு காவல் துறை டிஜிபி சங்கர் ஜிவால் வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கையில், போலீசார் சீருடையில் சமூக வலைதளங்களில் பதிவுகள்செய்வதைத்தடை செய்துள்ளார். மேலும், தனிப்பட்ட முறையில் தொலைக்காட்சி, யூடியூப் போன்ற ஊடகங்களில் பங்கேற்கும் பொழுது முன்கூட்டியே அனுமதி பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். ஊடகங்களில் பங்கேற்கவிரும்பும் காவல்துறையினர்,



தங்கள் உரையினை முன்கூட்டியேதகவலாகஅளித்து, அதற்கான ஒப்புதலை பெற வேண்டும். இது சம்பந்தமாகத்தேவையான வழிகாட்டுதல்களை உயர் அதிகாரிகளிடம் இருந்து பெற்றுத்தான் எந்த நிகழ்ச்சியிலும்பங்கேற்பது கட்டாயம் என உத்தரவு விடப்பட்டுள்ளது.

வழக்குகளின் விசாரணை, ஆதாரங்கள், விசேட நடவடிக்கைகள் போன்ற முக்கிய ரகசிய தகவல்களை ஊடகங்களில் பகிரக்கூடாதுஎனவும்டிஜிபி தெரிவித்துள்ளார். சில நிகழ்ச்சிகளில்சீருடையுடன் பங்கேற்பவர்கள், பரபரப்பான தகவல்களை வெளிப்படுத்தி வருவது கவலைக்குரியதாகவும் கூறியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அகில இந்திய பணியாளர் நடத்தை விதிகளுக்கு எதிரானவை என்பதால், இவற்றை தடுக்க இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. காவல்துறையினர் பொது ஒழுங்கும், தொழில்முறை மரியாதையும்கடைப்பிடிக்க வேண்டும் என்பதே டிஜிபி சங்கர் ஜிவாலின் நோக்கம்.

இத்தகவலைஅனைத்து உயர் அதிகாரிகள் தங்களுக்குக் கீழ் பணியாற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் எச்சரிக்கையாகஅறிவுறுத்த வேண்டும்.இந்தஉத்தரவை கட்டாயமாக அனைவரும் பின்பற்ற வேண்டும் என சுற்றறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ஏ.டி.எம்.களில் ரூ.100, ரூ.200 நோட்டுகள் கட்டாயம்

### ரிசர்வ் வங்கி உத்தரவு

நாடெங்கும் ஏ.டி.எம். மெஷின்களில் ரூ.500 நோட்டுகள் மட்டுமே அதிகளவில் இருப்பதால், சிறிய denomination (நாணயமதிப்புள்ள) ரூ.100 மற்றும் ரூ.200 நோட்டுகள் பொதுமக்களுக்கு கிடைப்பதில்சிரமம்ஏற்பட்டு வருகிறது. குறிப்பாக ஏழை, நடுத்தர வர்க்க மக்களுக்கு இது பெரும் இடையூறாக அமைந்துள்ளது.





இதையடுத்து, ரிசர்வ் வங்கி (RBI) அனைத்து வங்கிகளுக்கும் புதிய சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. அதில், ஏ.டி.எம். மெஷின்களில் ரூ.100 மற்றும் ரூ.200 நோட்டுகளை கட்டாயம் வைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

2024ம் ஆண்டு செப்டம்பர் 30க்குள், ஒவ்வொரு ஏ.டி.எம். மெஷினிலும் 75 சதவீதம் அளவில் குறைந்தது ஒருகேசெட்டில் ரூ.100 அல்லது ரூ.200 நோட்டுகள் வைக்கப்பட வேண்டும். அதனைத் தொடர்ந்து, 2025ம் ஆண்டு மார்ச் 31க்குள் 90 சதவீதம் அளவில் இதே நடைமுறை அமலாக்கப்பட வேண்டும்.

வங்கிகள் மற்றும் ஏ.டி.எம். ஆபரேட்டர்கள் தற்போது ஏ.டி.எம்.களில் முக்கியமாக ரூ.500 நோட்டுகளையே வைக்கின்றனர். ஏற்கனவே புழக்கத்தில் இல்லாத ரூ.2,000 நோட்டுகள் வைக்கப்படுவதில்லை. ஆனால் ரூ.100 மற்றும் ரூ.200 நோட்டுகளும் வைக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் குறைந்த மதிப்புள்ள நாணயங்களை பெற முடியாமல் தவித்து வருகின்றனர்.

இந்த புதிய உத்தரவு அமலாகும் பட்சத்தில், பொதுமக்களுக்கு தேவையான சிறிய denomination நோட்டுகள் ஏ.டி.எம்.களிலேயே எளிதில் கிடைக்கும். சிறு வியாபாரிகள், தினசரி ஊழியர்கள் உள்ளிட்ட பலருக்கு இது பெரிதும் உதவியாக அமையும்.

பணப்புழக்கத்தில் சீர்திருத்தம்கொண்டுவரும் நோக்கில் ரிசர்வ் வங்கி எடுத்துள்ள இந்த முடிவுக்கு வங்கி துறையில் இருந்து விரைவான செயல்பாடு எதிர்பார்க்கப்படுகிறது. இது, நாடு முழுவதும் சிறு மதிப்புள்ள நோட்டுகள் கிடைப்பதைப்பெருமளவில் மேம்படுத்தும் என நம்பப்படுகிறது.

## கோவை சர்வதேச விமான நிலையம் விரிவாக்கம் மேலும் 12 ஏக்கர் நிலம் அரசிடம் கோரிக்கை

கோவை சர்வதேச விமானநிலையத்தை 632.95 ஏக்கர் பரப்பளவில் விரிவாக்கம் செய்யும் திட்டத்தின் கீழ், தமிழக அரசு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் எந்தவித நிபந்தனையும் இல்லாமல் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் நிலங்களை ஒப்படைத்தது.

இந்நிலையில், விரிவாக்க பணிகள் மேற்கொள்ளப்பட உள்ள பகுதிக்கு அருகில் உள்ள மேலும் 12 ஏக்கர் நிலம் தேவையாக உள்ளது என இந்திய விமான நிலைய ஆணையம் தற்போது அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த கோரிக்கையை தமிழக அரசுஇன்னும்ஏற்கவில்லை என்றும், இதுவரை எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போதுவரை, தமிழக அரசு ஆணையத்திடம் 451.74 ஏக்கர் பட்டா நிலமும், 20.58 ஏக்கர் புறம்போக்கு நிலமும் உள்பட பணிகளை தொடங்க அனுமதித்துள்ளது. மேலும், 15 ஏக்கர் நிலம் இருவார காலத்தில் வழங்கும் வகையில் வருவாய்துறை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

மேலும், 134.32 ஏக்கர் பாதுகாப்பு நிலமும் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் வழங்கப்பட்டுள்ளது. இப்பகுதிபாதுகாப்புநிலமாக இருப்பதால், மீதமுள்ள பகுதிகள் தொடர்பான உரிமைகள் மற்றும் ஒப்படைப்புநடைமுறைகள் தொடருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகூடாது, 8 ஏக்கர் பட்டா நிலம், நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் இதுவரை வழங்கப்படவில்லை. வழக்குமுடிந்தபின்னர் அந்த நிலமும் ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விமான நிலைய விரிவாக்கத்திற்கான ஆரம்ப கட்ட பணிகள் தொடர்பாக, இந்திய விமானநிலையஆணையம் ஏற்கனவே டெண்டர்கள் கோரியுள்ளது. விரிவாக்கம் தொடர்பான முக்கிய கட்டுமான பணிகள் வரும் நாட்களில் தொடங்கப்படும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டம் நிறைவேறினால், கோவை விமான நிலையத்தின் இயல்புகளும், பரிசோதனைகள் மற்றும் சர்வதேச விமான சேவைகளும் பெரிதும் மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கிய நா.கார்த்திக்



தி கோவை ஹெரால்டு

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்ட திமுக சார்பில் பாப்பநாயக்கன் பாளையத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாநகர் மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா. கார்த்திக் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவர்கள், மாணவிகளுக்கு ஆடைகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாநகர் மாவட்ட திமுக துணைச் செயலாளர் கல்பனா செந்தில், தலைமை செயற்குழு உறுப்பினர் வே. பாலசுப்பிரமணியம், பொதுக்குழு உறுப்பினர் இரா. மணிகண்டன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## டிரம்பை துரத்த புதிய கட்சி தொடங்கும் எலன் மஸ்க் நண்பர்கள் எதிரிகளான சோகம்

தி கோவை ஹெரால்டு

உலகம் முழுக்க உள்ள ஹாட்டாப்பிக்,’ட்ரம்ப்-எலான் மஸ்க் நட்பு விரிசல்தான் தற்போதுபேசப்பட்டுவருகிறது. இருவரும்சமூகவலைதளத்தில் மாறி மாறி கருத்துகள் மூலம் மோதிக் கொண்டனர். பின்பு, எலான் மஸ்க் புதிய கட்சி தொடங்குவது வரை சென்றுள்ளார்.

அமெரிக்க அதிபர் ட்ரம்பிடன் எலான் மஸ்கிடம் ஏற்பட்டுள்ள நட்பு விரிசல் குறித்து கேள்வி கேட்கப்பட்ட போது, ’நண்பராக இருந்து எதிரியாக மாறியவர்’ என்று குறிப்பிட்டுள்ளார்.’

எலான்மஸ்க்உடன்மீண்டும் சமாதானம் ஏற்படுமா?’ என்று கேட்டப்போது,ட்ரம்ப்,"எனக்கு அப்படி எந்தப் பிளானும் கிடையாது. யாரோ ஒருவர் தான் தவறு செய்துள்ளார். நான் அதுகுறித்து யோசிப்பது கூட இல்லை. என்னைத்தவிர, யார் இல்லையென்றாலும் அமெரிக்கா இயங்கும்" மேலும், எலான் மஸ்க்கை, ’புத்தியை இழந்துவிட்டார்’ என்றும் டிரம்ப் காட்டமாக கூறியுள்ளார்.



ட்ரம்ப்-எலான் மஸ்க் திடீர் நட்பு விரிசலுக்கு காரணம், ’ஒன் பிக் அண்ட் பியூட்டிஃபுல் பில்’ என்ற புதிய சட்டம்தான். இந்தச் சட்டத்தை ட்ரம்ப் அறிமுகப்படுத்தினார்.

இதில் சில வரிச் சலுகைகளும், சில வரி ரத்துகளும் இடம் பெற்றிருந்தன. இதற்கு எலான் மஸ்க் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்திருந்தார். இந்த எதிர்ப்பு தான் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக பகையாக மாறியுள்ளது.

இதையடுத்து, டிரம்பை துரத்த எலன் மஸ்க் புதிய கட்சி தொடங்கியுள்ளார். அமெரிக்கன் புதிய கட்சி என்ற பெயரில் அவரது கட்சி இயங்கும். அவருக்கு சொந்தமான எக்ஸ் பக்கத்தில் புதிய கட்சி தொடங்க 80 சதவிகிதம் பேர் ஆதரவு அளித்துள்ளனர்.

# உணவகங்களில் தரம் குறைந்த உணவு; 14 கடும் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிட்டது உணவு பாதுகாப்புத் துறை

சமீப நாட்களாக உணவகங்களில் உணவு உண்பதன் பின்னர் பலர் உடல்நலக் குறைபாடுகளுக்கு ஆளாகி வருகின்றனர். வாந்தி, வயிற்றுகோளாறு, தொற்று போன்ற கோளாறுகள் அதிகரித்துள்ள நிலையில், உணவகங்களின் உணவுத் தரம் குறித்து கேள்விகள் எழுந்துள்ளன. இதையடுத்து உணவு பாதுகாப்புத் துறையினர் சோதனைகளை தீவிரப்படுத்தி பல்வேறு உணவகங்கள், பேக்கரிகள் மற்றும் உணவுப் பொருள் விற்பனை நிலையங்களில் சோதனை நடத்தி வருகின்றனர். இதில் காலாவதியான பண்டங்கள், பழைய இறைச்சி போன்றவை பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படுகின்றன.

இந்த சூழ்நிலையில், உணவகங்களில் தரமான மற்றும் சுகாதாரமான உணவு கிடைக்கும்படி, உணவு பாதுகாப்புத் துறை புதிய வழிகாட்டு நெறிமுறைகள் 14-ஐ வெளியிட்டுள்ளது. இவை அனைத்து உணவு வணிகர்களும் கட்டாயமாக பின்பற்ற வேண்டியவையாகும்.

வணிகர்கள் உணவு பாதுகாப்பு உரிமம் அல்லது பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். பணியாற்றும் ஊழியர்கள் டைபாய்டு மற்றும் மஞ்சள் காமாலை தடுப்பூசிகள் செலுத்தியிருக்க வேண்டும். மேலும், மருத்துவ சான்றிதழும் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

உணவகங்களில் பயன்படுத்தப்படும் தண்ணீர் நுண்ணுயிரி பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்க வேண்டும். உணவுப் பொருட்கள் ஈக்கள் மற்றும் பூச்சிகளால் பாதிக்கப்படாதவாறு கண்ணாடி பெட்டிகளில் பாதுகாக்கப்பட வேண்டும். உணவு எண்ணெய்களை ஒரேமுறைமட்டுமேசமைக்க பயன்படுத்த வேண்டும். மீதமுள்ள எண்ணெயை எஃப்எஸ்எஸ்ஏஐ அங்கீகரித்த கொள் முதலாளரிடம் மட்டுமே விற்கலாம். விற்பனை ஆகாத உணவுகளை நுகர்வோருக்கு வழங்கக் கூடாது.

அச்சிடப்பட்ட காகிதங்களில் உணவுப் பொருட்கள் பரிமாறக் கூடாது. அனுமதியில்லாத பிளாஸ்டிக் மூடிகளில் உணவுப் பொருட்களை சூடாகவோஇயல்பானநிலையிலோ பொட்டலமிடுதல் தடை செய்யப்பட்டுள்ளது. உணவகங்களில் வாழையிலை அல்லது அனுமதிக்கப்பட்ட அலுமினியம் பாயில்கள் மட்டுமே பயன்படுத்த அனுமதி உள்ளது.

எந்தவொரு உணவு எண்ணெயும் லேபிள் விபரங்களின்றி விற்பனை செய்யக் கூடாது. உணவைக் கையாளும் பணியாளர்கள்கட்டாயமாக கையுறைமற்றும்தலைமுடி கவசம் அணிய வேண்டும். பொட்டலமிடப்பட்ட உணவுப் பொருட்களில் எஃப்எஸ்எஸ்ஏஐ உரிம எண்ணுடன் கூடிய முழுமையான லேபிள் தகவல்கள் இருக்க வேண்டும். சமைக்கும் உணவுகளிலும்நொறுக்குத் தீனிகள் தயாரிக்கவும் அயோடின் கலந்த உப்பையே பயன்படுத்த வேண்டும்.

சிக்கன் பக்கோடா, பஜ்ஜி, கோபி மஞ்சூரியன் போன்ற உணவுகளில் எந்தவொரு செயற்கை நிறமையும் சேர்க்கக் கூடாது.

இந்த வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றாவிட்டால் கடைகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என்றும், உரிமையாளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் உணவு பாதுகாப்புத் துறை எச்சரித்துள்ளது. மேலும், இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 14 நாட்களுக்குள் அனைத்து உணவு வணிகர்களும் இவற்றை கடைபிடிக்கவேண்டும்என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விராட் கோலியுடன் சகோதரி பாவ்னா பேசிக் கொள்வதில்லையா? பின்னணி என்ன?

சுமார் 18 ஆண்டுகள் காத்திருப்புக்கு பிறகு, விராட்கோலி ஐ.பி.எல் கோப்பையை வென்றுள்ளார். கோடிக்கணக்கான ரசிகர்கள் அவருக்க வாழ்த்து தெரிவித்துள்ளனர். அப்படி, சமூகவலைத்தளத்தில் வாழ்த்தியவர்களில் பாவ்னா கோலிதிங்கராவும் ஒருவர். இவர், வேறு யாருமல்ல விராட் கோலியின் உடன் பிறந்த இளைய சகோதரிதான்.

ஆர்.சி.பிகோப்பையை கைப்பற்றியதும் இன்ஸ்டா பக்கத்தில் விரிவாக தன் சகோதருக்கு ஒரு வாழ்த்து பதிவை பாவ்னா பதிவிட்டிருந்தார். ஏராளமானோரை, அந்த பதிவு ஈர்த்திருந்தது.

இதற்கிடேயே ஒருவர் பதிவிட்டிருந்த கமெண்டில், உங்களை பற்றி விராட் கோலி ஒரு பேச்சிலும் குறிப்பிடவில்லை. அதுமட்டுமல்ல, உங்கள் போஸ்டையும் விராட் கோலியோ, அவரது மனைவியோ லைக் செய்ததும் இல்லை. நீங்கள் உங்கள் சகோதரருடனும், மைத்துனியுடனும் நல்ல உறவைபேணவில்லையே என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள பாவ்னா, உண்மையா அன்பைபுரிந்துகொள்ளும் பொறுமையை கடவுள் உங்களுக்கு வழங்கட்டும். யார் மீது யார் எவ்வளவு அன்பு வைத்துள்ளார்கள் என்பதை உலகுக்கு காட்ட வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் வாழ்க்கையில் போதிய அன்பு கிடைக்கிறதா? பாதுகாப்பற்ற உணர்வுடன் இருக்கிறீர்களா? என்று தெரியவில்லை. உண்மையா அன்பு எந்த எதிர்பார்ப்பையும் வைத்துக்கொள்வதில்லை. கடவுள் உங்களை ஆசிர்வதிக்கட்டும் என்று பதில் அளித்திருந்தார்.

இந்த பதிலை சிறிது நேரத்தில் பாவ்னா அழித்து விட்டார். எனினும், விராட் கோலியில் ரசிகர்கள் பாவ்னாவின் பதில் கமெண்டை ஸ்கீரின் ஷார்ட் எடுத்து வைத்து பரப்பி வருகின்றனர்.

ஐ.பி.எல் இறுதிப்போட்டி நடந்த ஜூன் 3ம் தேதி இரவு விராட் கோலியின் பல புகைப்படங்களை இன்ஸ்டாவில் பதிவிட்டிருந்த பாவ்னா, 'இன்றைய இரவு அழவும் சிரிக்கவும் வைத்தது. இதற்காக நீ நீண்ட காலம் காத்திருந்தாய். உன்னை நேசித்த அனைவரும் உன்னுடன் சேர்ந்து அழுதோம். அனைவருக்கும் நீ மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் கொடுக்க கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். சொர்க்கத்தில் உள்ள ஒருவர் தனது மகனை கண்டுபெருமைப்படுகிறார்'என்று குறிப்பிட்டிருந்தார்.

# தட்கல் ரயில் டிக்கெட்டுகளுக்கு இ-ஆதார் கட்டாயம்

இந்தியரயில்வே, தட்கல் ரயில் டிக்கெட்டுகளை முன்பதிவுசெய்யவிரும்பும் பயனர்களுக்கு இ-ஆதார் அங்கீகாரத்தை விரைவில் கட்டாயமாக்கவுள்ளது. இந்தபுதியநடைமுறைஇந்த மாத இறுதியில் இருந்து நடைமுறைக்கு வரும் என அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கையின் மூலம்தட்கல்டிக்கெட்டுகளை தவறாகப் பயன்படுத்தும் முயற்சிகளை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, முகவர்கள் மற்றும் பாட்கள் வழியாக மேற்கொள்ளப்படும் தவறான முன்பதிவுகள் மூலம் உண்மையான பயனர்களுக்கு டிக்கெட் கிடைக்காத நிலையை சரி செய்யும் நோக்கத்துடன் இந்த முறை கொண்டு வரப்படுகிறது.

மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், தனது எக்ஸ் பக்கத்தில், "தட்கல் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய விரைவில் இ-ஆதார் அங்கீகாரம் கட்டாயமாகப்படும். இதன் மூலம் உண்மையான பயனர்கள் அவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் உறுதிப்படுத்தப்பட்ட டிக்கெட்டுகளைப் பெற முடியும்" எனத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற விசாரணைகளில், தட்கல் டிக்கெட்டுகள் சில நிமிடங்களில் காணாமல் போவதற்கான காரணமாக சுமார் 2.5 கோடி போலி பயனர் கணக்குகள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, IRCTC இவற்றை முடக்கியது குறிப்பிடத்தக்கது.

இதனைக் கொண்டே, முகவர்கள் மற்றும் பாட்கள் தட்கல் சேவையை வெகுவாக துஷ்பிரயோகப் படுத்தி வந்தது அம்பலமாகியுள்ளது. பயணிகள் இதுகுறித்து கடந்த சில மாதங்களாக புகார்கள் அளித்து வந்ததோடு, சமூக ஊடகங்களிலும் இந்தப்பிரச்சனைக்கு தீர்வு வேண்டும் என வலியுறுத்தி வந்தனர்.

புதிய இ-ஆதார் அடிப்படையிலான அங்கீகார முறை, ரயில்வே டிக்கெட் சேவையின் lbவடிப்புத்தன்மையையும், பயணிகளுக்கு கிடைக்கும் வாய்ப்புகளையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜிம்பாப்வேவில் 50 யானைகளை கொன்று இறைச்சியாக கொடுக்க முடிவு

ஜிம்பாப்வே அரசு, நாட்டில்தாங்கும்திறவுகேல் அதிகமாகவும், பசுமை வளங்களை இழப்பதற்கும் காரணமாக உள்ளதாக கூறி, டஜன் கணக்கான யானைகளை கொன்று அவற்றின் இறைச்சியை மக்களுக்கு உணவாக வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கையை ஜிம்பாப்வே பூங்காக்கள் மற்றும் வனவிலங்கு ஆணையம் மேற்கொள்கிறது.

தென்னாப்பிரிக்காவில் உள்ள ஜிம்பாப்வே, போட்ஸ்வானாவுக்குப் பிறகு உலகிலேயே இரண்டாவது அதிகமான யானைகள்கொண்டநாடாக விளங்குகிறது. ஆரம்ப கட்டத்தில் 50 யானைகள் இலக்காகக் கொள்ளப்பட உள்ளதாக அதிகாரப்பூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மொத்தமாக எத்தனை யானைகள் கொல்லப்படவுள்ளன, எத்தனை நாட்களில் இந்த



நடவடிக்கை நடைபெறும் என்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

2024-ஆம் ஆண்டில் சேவ் வேலி கன்சர்வேன்சி எனும் வனப்பகுதியில் நடைபெற்ற வான்வழி கணக்கெடுப்பில் 2,550 யானைகள் இருப்பது கண்டறியப்பட்டது. ஆனால் அந்தக் காட்டின் இயற்கை தாங்கும் அளவு மட்டும் 800 யானைகளுக்கே இருக்கிறதுஎனஜிம்பார்க்ஸ் தெரிவித்துள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்தது 200 யானைகள் மற்ற பகுதிகளுக்குத் தக்கவைத்தல் செய்யப்பட்டுள்ளன.

"இந்த திட்டத்தின் கீழ் சுட்டுக்கொல்லப்படும் யானைகளின் இறைச்சி உள்ளூர் மக்களுக்கு உணவாக வழங்கப்படும். ஆனால் தந்தங்கள் அரசாங்க சொத்தாக கருதப்படும்; அவை பாதுகாப்புக்காக ஜிம்பார்க்ஸ் அமைப்புக்கு ஒப்படைக்கப்படும்," என அதிகாரிகள் தெரிவித்தனர்.

2024-ஆம் ஆண்டில் கடுமையான வறட்சி காரணமாக உணவுப் பற்றாக்குறையை சமாளிக்க, 200 யானைகள் கொல்லப்பட்டன. 1988-க்குப்பிறகுஇத்தனைபெரிய அளவில் யானைகளை வெட்டியிருப்பது இதுவே முதல் முறை என குறிப்பிடப்படுகிறது.

இந்தஅறிவிப்புபல்வேறு சமூக அமைப்புகள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு ஆர்வலர்களிடையே கடும் விமர்சனங்களை உருவாக்கியுள்ளது. "உணவுக்காக விலங்குகளை வேட்டையாடுவது மனிதாபிமானத்துக்கு எதிரானது" என சத்தமாகக் கண்டனம் தெரிவிக்கப்படுகிறது.

# என்னையும், கோவையையும் பிரிக்க முடியாது இளையராஜா நெகிழ்ச்சி

தி கோவை ஹெரால்டு

நான் வைத்திருக்கும் ஹார்மோனியம் கோவையில்வாங்கியதுதான், இன்றும் அதில் தான் கம்போஸ் செய்கிறேன். என்னையும், கோவையையும் பிரிக்க முடியாது என இசைஞானி இளையராஜா கூறியுள்ளார்

கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் விடுதியில் இசைஞானி இளையராஜாவுக்கு ரோட்டரி கிளப்பின் உயரிய விருதானதொழில்சிறப்பு விருது வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இளையராஜாவிற்கு ரசிகர்கள் பூங்கொத்து,




ஓவியங்கள் வழங்கி புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய இளையராஜா, "நான் பேச்சாளர் இல்லை. நான் ஒரு பட்டாளி. பட்டாளி என்றால் பாட்டு படுபவன். பட்டாளி என்பவன் வேலை செய்பவன். அவன் படும் பாடுகளால் அவன் பட்டாளியாக இருக்கிறான்.

அந்த பட்டாளிகளில் நானும் ஒருவன். என் பாடு என்பது வேறு. அவர்களது பாடு வேறு. என் பாடு தான் பாட்டுகளாக மாறுகிறது. கோவையில் என் காலடி படாத இடமே இல்லை.

அப்போது இருந்த கோவையில் ஒவ்வொரு தெருவிலும் என் ஆர்மோனியம் ஒலிக்காத தெருவே கிடையாது. எனது ஆர்மோனியம் பெட்டி கோவையில் செய்தது தான்.

எனது அண்ணன் வாங்கி வந்த ஆர்மோனியம் அது. அதில் தான் இன்றும் நான் பாடல்களை கம்போஸ் செய்து வருகிறேன்.

எனக்கும் கோவைக்கும் நெருங்கிய உறவு இல்லை. தொடர்பு தான் உள்ளது. என்னையும், கோவையையும் பிரிக்க முடியாது"என்றார்.

# செம்மொழியான தமிழ்மொழியாம் சமூக வலைதளங்களில் கலை இலக்கியப் போட்டிகள்

## கலந்துகொள்ள மாவட்ட ஆட்சியர் அழைப்பு

தமிழ்மொழியின் பெருமையைப் பரப்பும் வகையில், 'செம்மொழியான தமிழ்மொழியாம்' என்ற தலைப்பில் நடைபெறும் கலை இலக்கியப் போட்டிகளில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சமூக ஊடகங்கள் வழியாக கலந்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க. கிரியப்பன் அறிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் தேதி, செம்மொழி நாளாக அரசு அறிவித்துள்ளதையடுத்து, செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் இந்த போட்டிகள் நடத்தப்படுவதாக கூறப்பட்டுள்ளது.

போட்டிகள் 'எக்ஸ்' தளம், இன்ஸ்டாகிராம், ஃபேஸ்புக் மற்றும் வாட்ஸ் ஆப் போன்ற சமூக வலைதளங்களின் வழியாக நடைபெறவுள்ளன. இதற்கான விதிமுறைகள் பின்வருமாறு:

தமிழ் சொற்பொழிவு போட்டி, 'செம்மொழி தமிழ் வளர்ச்சியில் கலைஞரின் பங்கு' அல்லது 'கணினி யுகமும் கன்னித்தமிழும்' என்ற தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் 2 நிமிடத்திற்கு அதிகமாகாத வீடியோ உரையாக அனுப்பவேண்டும்.

தமிழ் கவிதை எழுதல்: 'இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' அல்லது 'தமிழே அமுதே' ஆகிய தலைப்புகளில் ஏதாவது ஒன்றில் 20 வரிகளுக்குள் எழுதப்பட்ட புதிய கவிதைகள் கோப்புகளாக அனுப்பப்பட வேண்டும்.

அறநெறிக் கதைகள்: திருக்குறள் அல்லது சங்க இலக்கியங்களில் உள்ள ஒழுக்கச் செய்திகள் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கதைகளை காணொலியாக பதிவு செய்து அனுப்ப வேண்டும்.

என்னுள் இருக்கும் கலைஞர்: தமிழ் மரபு, தமிழ் வளர்ச்சிக்கு துணைநின்ற அறிஞர்கள் அல்லது காலத்தை வென்ற தமிழ் தொடர்பான கருப்பொருளில் கணினி ஓவியங்கள் அல்லது கைவினை ஓவியங்களை உருவாக்கி அனுப்ப வேண்டும்.

இந்தப்போட்டிகள்தமிழ் மொழியின்பெருமைமற்றும் அதன் கலாசாரத்தைத் தொட்டுத் தந்தையாக்கும் ஒரு முயற்சியாகவும், இளம் தலைமுறையிடம் தமிழ் மீதான ஈர்ப்பை அதிகரிக்கவும் நடத்தப் படுவதாக மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

# தடுப்பூசி போடாத மணமகள் தேவை விசித்திர மணமகள் தேவை விளம்பரம்

மணமகள் தேவை எனப் போடப்பட்ட ஒரு விசித்திரமான விளம்பரம் சமூகவலைதளங்களில்தற்போதுபெரும்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. "கொரோனா தடுப்பூசி போடாத பெண் தேவை" என்ற இவையாக மணமகள்தேவைவிளம்பரம்வந்துள்ளமை, பலரிடையே வியப்பையும், விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய காலக் கட்டத்தில் திருமண வாழ்க்கையை தொடங்க விரும்பும் பலரும், அவர்களின் கல்வி, பொருளாதாரம், குடும்பம், இன-சமூகம், வசதிகள் என பல பரிமாணங்களை முன்னிறுத்தி வரன் தேடும் நிலை காணப்படுகிறது. இத்தகைய தேடல்களை எளிதாக்கும் வகையில் மேட்ரிமோனிகள், திருமண தகவல் மையங்கள், பத்திரிகை விளம்பரங்கள் போன்றவை பயன்பாட்டில் உள்ளன. பொதுவாக இவையனைத்திலும் வயது, கல்வித் தகுதி, வருமானம், குடும்ப பின்னணி போன்ற விவரங்களே முக்கியமாக இடம்பெறும். ஆனால் தற்போது வைரலாகியுள்ள ஒரு விளம்பரம், சாதாரணமாக ஏற்கப்படும் தரவரிசைகளைத்தாண்டி கொரோனா தடுப்பூசியை பிரதான அளவில் முன்னிறுத்தியுள்ளது. விளம்பரத்தில், "கொங்குவேளாளகவுண்டர் சமூகத்தை சேர்ந்த, படித்தும் வசதியுடனும் உள்ள மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த, கொரோனா தடுப்பூசி போடாத பெண் மணமகளாக தேவை" என தொடர்பு எண்ணுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு பல வலைதளங்களில் பகிரப்பட்டு, நெட்டிசன் களிடையே கலாட்டாவாக பரிமாறப்படுகிறது. ஒருவர் தனது உடல்நல தேர்வுகளை திருமணத் தேவைகளோடு இணைத்து பிரசாரப்படுத்துவது ஏற்கத்தக்கதா என்பது குறித்து பலரும் விவாதம் செய்து வருகின்றனர்.

தடுப்பூசி தொடர்பான அறிவு, மருத்துவ உலகின் அறிவுரைகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கே எதிராக உள்ள இந்தக் கருத்து, சமூக ஆரோக்கியத்தை மையமாகக் கொண்டு செயல்படும் நபர்களிடம் கடும் எதிரொலியை ஏற்படுத்தியுள்ளது.

இது போலான விளம்பரங்கள் சமூகத்தில் தவறான தகவல்களைப் பரப்பக்கூடும் என்பதால், இவை தொடர்பாக சிந்தனையுடனும் பொறுப்புடனும் அணுக வேண்டும் என நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

# கோவை ஜீடி டெக்னிக்கல் பயிற்சி மையத்தில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா




தி கோவை ஹெரால்டு

கோவையில் உள்ள ஜீடி டெக்னிக்கல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் சமீபத்தில் தனது 16வது ஏஎச்கே சான்றிதழ் வழங்கும் விழாவை நடத்தியது.

இந்த நிகழ்ச்சியில், ஜெர்மன் தூதரகத்தின் இடைக்கால கான்சல் ஜெனரல் டாக்டர் கதிரின் மிசெரா-லாங் சான்றிதழ்களை வழங்கினார். இந்த விழாவில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் நான் முதல்வன் திட்டத்தின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் எம்.ஜெயப்பிரகாசன் மற்றும் ஜீடி டெக்னிக்கல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் இயக்குநர் ஜி.டி.ராஜ்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

# மொழி பற்றி பேசி யாரையும் புண்படுத்தாதீர் மகாராஷ்டிர ஆளுநர் சிபிஆர் அறிவுறுத்தல்

தி கோவை ஹெரால்டு



கோவை விமான நிலையத்தில் மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் பேசிய போது, பெங்களூருவில் நடந்த துயரமான சம்பவம் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியது எனக் கூறினார்.

விளையாட்டைப் பொறுப்புடனும் கட்டுப் பாட்டுடனும் பார்க்க வேண்டும். வெற்றியை கொண்டாடும் போதும் பொறுமைஅவசியம்என கூறினார்.கட்டுப்பாடின்றி நடந்ததால் பத்து உயிர்களை இழந்துள்ளோம்.

இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாதிருக்க அரசு மற்றும் அணிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன் கூட்டியே எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நடிகரும் அரசியல் தலைவருமான கமல் ஹாசன் குறித்து அவர் கூறுகையில், கமல்ஹாசன் பொது வாழ்க்கையில் இருக்கிறவர், அரசியலுக்கு மட்டும் ஒரு பகுதி பொது வாழ்க்கை அல்ல, திரைப் படங்களில் நடிக்கும் போது கூட பொதுமனிதராகத்தான் இருக்கிறார்.

பேசுகின்ற போது கவனத்துடன் பேச வேண்டும். சமஸ்கிருத மொழியில்இருந்துதான் தமிழ் மொழி வந்தது என்றுகூறினால்தமிழகம் கொந்தளிக்காதா? தேவையற்றதை பேசு வதை பொது வாழ்க்கையில் இருப் பவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.'

மேலும், காவிரி நீர் பிரச்சனை குறித்து பேசிய அவர், தற்போது நிலவும் அமைதியைக் ,குலைக்கும் வகையில் தேவையற்ற கருத்துகள் ,வெளியிடப்பட வேண் டாம் எனக் கேட்டுக் கொண்டார்.

முதல்வர் கூறிய "தமிழகத்தில் எந்த ஷா வந்தாலும் காலூன்ற முடியாது" என்ற பதி லளித்த அவர் இது அரசியல் தலைவர்கள் பதிலளிக்க வேண்டிய விஷயம்என்றுகூறினார்.

ஆனால் ஜனநாயகம் என்பது ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கும் முறையாக இருக்க வேண்டும் என்றார்.

மொழி பற்றி பேசும் பொழுது எவரையும் புண்படுத்தக்கூடாது என்பதேஅவரின்கருத்து. மாநிலங்களில் உள்ள தாய் மொழிகளுக்கு மதிப்பளிக்கவேண்டும். புதிய கல்விக் கொள் கையின் நோக்கம் அதுவே.

ஒருவருடைய தாய் மொழியை இழிவாகப் பேசும் உரிமை எவருக்கும் இல்லை என்றார்.

மேலும், தமிழக முதல்வர் மத்திய அரசில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்தபோது தமிழுக்காக என்ன செய்தார் என்பதை விளக்கும் வெள்ளை அறிக்கைவெளியிடப்பட வேண்டும்எனக்கேட்டுக் கொண்டார்

கல்விதரம்உயர்வது அவசியம் என்றும், இப்போது கல்வி பரவலாக இருப்பினும் தரமான கல்வியே எதிர்காலத்தின் நம்பிக்கையாக அமைய வேண்டும்என்றும்அவர் வலியுறுத்தினார்.

தமிழ் மாணவர்கள் யுபிஎஸ்சிதேர்வுகளுக்கு பயப்படாமல், துணிச்சலுடன் எதிர் கொள்வதற்கான நிலை உருவாக வேண்டும். இந்த தேர்வுகள் தமிழர்களின் எதிர் காலத்திற்கும் தமிழகத்தின் அங்கீகாரத்திற்கும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஆகவே யுபிஎஸ்சி தேர்வுகளை சிறப்பாக மேற்கொள்ள மாணவர்கள் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

# யானையின் தும்பிக்கையை துண்டித்த எறிபத்த நாயனார்

தி கோவை ஹெரால்டு



கொங்குநாட்டில்அமைந்துள்ள கருவூர் சோழ மன்னர்களின் முக்கிய தலைநகரங்களில் ஒன்றாகும். இயற்கையின் அழகும், மனிதனால் கட்டப்பட்ட அதிசயங்களும் ஒன்றுக்கொன்று போட்டி போடும் ஊர். இது பசுபதீஸ்வரரின் பழமையான ஆனிலைக் கோயில்.அத்தகைய நகருக்குப் புகழைச் சேர்க்கும் வகையில், இறைவனின் பக்தர் ஒருவர், எரிபத்தர் என்பவர் வாழ்ந்து வந்தார்.எங்கெல்லாம்இறைவனின் பக்தர்கள் சிரமப்படுகிறார்களோ, அங்கெல்லாம்அவர்களைக்காக்க கோடரியால் காட்சியளித்தார். சிவகாமியாண்டார் என்ற முதியவர் இருந்தார், அவர் பசுபதீஸ்வரருக்கு நறுமண மாலைகளை அர்ப்பணிக்கும் சேவையில் தனது மனதையும் உடலையும் ஈடுபடுத்தினார். ஒரு நாள் காலையில், அவர் வழக்கம் போல், அவர் தனது கூடையை புதிய பூக்களால் நிரப்பினார், மேலும் அவரது மனதில் கடவுள் எண்ணங்களை நிரப்பினார். ஆராதனை நேரமாக இருக்க கோவிலுக்கு விரைந்தார். அன்றைய தினம் மகாநவமி கொண்டாட்டத்திற்கு முந்தைய நாள், எனவே பேரரசர் புகழ சோழரின்அரசயானைகாவேரியில் குளித்துவிட்டு ஊர் வழியாக சென்று கொண்டிருந்தது. கூடை நிறைய பூக்களுடன் கோவிலுக்கு விரைந்த சிவகாமியாண்டரை அது பார்த்தது. துடுக்குத்தனமான யானை கூடையைப் பிடித்து மலர்களைத் தூவி நசுக்கியது. காவலர்கள் யானையைக் கட்டுப்படுத்தி, செய்த பாவத்தை உணர்ந்து, யானையைவேகமாக விரட்டினர். நிலைகுலைந்த சிவகாமியாண்டார் யானையை குச்சியால் அடிக்க பின்னால் ஓட முயன்றார், ஆனால் வயது முதிர்வு காரணமாக முடியவில்லை. அவனால் செய்ய முடிந்ததெல்லாம், "ஐயோ சிவனே! உறுமிய யானையைக் கொன்று அதன் தோலை அணிந்தாய்!பலவீனர்களின்பலம் நீயே! இனி நான் என்ன செய்வது? உன் வாசனைத் தலைக்காக நான் கொண்டு வந்த பூக்களை யானை வீணாக்கியது! ஐயோ சிவா!!"

அவ்வழியே வந்த எரிபத்தர் சிவகாமியாண்டரை வணங்கி நடந்ததை அறிந்தார். யானையின் அட்டூழியத்தை அறிந்த அவர் ஆத்திரமடைந்தார். யானையை வதைக்க மரண தெய்வம் போல் புயல்போல்சென்றான்.யானையின் மீது பாய்ந்து கோடரியால் அதன் தும்பிக்கையை வெட்டினான். பின்னர் அவர் தங்கள் கடமையில் தவறிய காவலர்களைக் கொன்றார், ஆனால் அவருக்குத் தேவையானதைச் செய்வதைத் தடுக்கவும்முயன்றார்.தப்பியோடிய ஒரு சில காவலர்கள் மன்னனின் தலைமைக் காவலரிடம் ஓடிச் சென்று இவ்வாறு தெரிவித்தனர் -"அரசயானையும்காவலர்களும் சிலரால் கொல்லப்பட்டனர். உடனடியாக அரசருக்குத் தெரிவிக்கவும்." எதிரிகளுக்கு சிம்மசொப்பனமான அரசன், இதைக்கேட்டுகோபத்தில்சிவந்த கண்களுடன் கர்ஜிக்கும் சிங்கம் போலஅந்தஇடத்தைஅடைந்தான். அவருடன்நான்குமடங்குஆயுதப் படைகள் இருந்தன. அவன் எதிர்ப்பார்த்ததற்கு மாறாக, எதிரிப் படை எதுவும் தென்படாமல், ரத்த வெள்ளத்தில் உருளும் யானையின் முன் ஒரு முனிவர் நிற்பதைக் கண்டான். "இதைச் செய்யத் துணிந்த பகைவன் எங்கே" என்று கர்ஜித்தான். எதிரில் கோடரியுடன் நின்ற எரிபத்தரை காவலர்கள் சுட்டிக் காட்டினர். அவர் ஆச்சரியமடைந்து, "அன்பின் வடிவமான பக்தர்கள் கோபமடைந்தால், இதற்குப் பின்னால் ஒரு வலுவான காரணம் இருக்கவேண்டும். பக்தன் இப்படி அடியெடுத்து வைப்பதற்கு நான் என்ன மோசமான பாவம் செய்தேன்?". பின்னர் அவர் தனது குதிரையிலிருந்து கீழே இறங்கி, கோபம் கொண்ட அந்த பக்தரை வணங்கி, "யானை மற்றும் காவலர்கள் செய்த குற்றம் என்ன?" என்று பணிவுடன் கேட்டார். எறிபத்தர் மிருகத்தின் பாவச் செயலைப் பற்றிச் சொன்னார். பெரும் மன்னன் புகழ சோழர், இறைவனின் அடியாருக்கு எதிராகப் பெரும் தவறைச் செய்த யானையும் காவலர்களும் தான் என்பதால், தானும் தண்டிக்கப்படுவதே சரியானது என எண்ணி, குற்ற உணர்வுகொண்டார். எரிபத்தரின் காலில் விழுந்து, "யானையையும் காவலர்களையும் மட்டும் கொல்வது செய்த பாவத்திற்குப் போதாது. என்னையும் கொன்று விடு! புனிதக் கோடரியால் கொல்வது வழக்கமல்ல, இந்த வாளால் என்னைக் கொன்றுவிடு" என்று முறையிட்டார். வாளை நீட்டினான்.

மன்னன் இறைவன் மீது கொண்ட அன்பும் பக்தர்களின் மீது கொண்ட மரியாதையும் எரிபத்தரை நினைக்க வைத்தது. அவர் பாவத்தில் நேரடியாக ஈடுபடாதபோது, அவரைத் துன்பப்படுத்தியதற்காக நான் என்னைக் கொல்ல வேண்டும். ஒப்பற்ற மன்னன், "இந்தப் பெரிய முனிவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன், ஏனென்றால் அவர் என்னைக் கொன்று என் பாவத்திற்குப் பரிகாரம் செய்கிறார்" என்று நினைத்தார். பிறகு, எரிபத்தர் மன்னனைக் கொல்வதற்குப் பதிலாக, தனது தலையைத்தானே வெட்டுவதற்காக வாளை எடுத்து உயர்த்தினார்.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த மன்னன், எரிபத்தர் அரசனுடன் தொடர்ந்து போராடிக் கொண்டிருந்த போது, தனது பலமான கரங்களால் அவரைத் தடுத்து நிறுத்தினார். அன்பாலும் மரியாதையாலும் இருபெரும் இதயங்கள் மோதிக்கொண்ட அந்த இக்கட்டானசூழ்நிலையில், கடவுள் தம் பக்தர்களை அழைத்தார், "அன்புநிறைந்த மக்களே! இவை அனைத்தும் உங்கள் பக்தியின் மகத்துவத்தைக் காட்டுவதற்காக நடந்தது." இருவரும் இறைவனுக்கு சிரம் பணிந்தனர். யானையும் காவலர்களும் உயிர் பெற்றனர். சிவகாமியாண்டரின் கூடையை மீண்டும் புதிய நறுமணப் பூக்கள் நிரப்பின. அரசன் குடையை தலைக்கு மேல் பிடித்தபடி அரச யானை மீது எரிபத்தரை ஊர் சுற்றி வந்தார். கோவிலுக்குச் சென்று காமத்தைக் கொல்லும் இறைவனை வேண்டினார்கள். எறிபத்தர் இறைவனுக்குத் தனது சேவையைத் தொடர்ந்தார் மற்றும் கைலாசத்தை அடைந்ததும் சிவகணங்களின் தலைவரானார்.

# தன்னுடைய கனவு காரை வாங்கிய நடிகர் அஜித்




கார் ஓட்டத்தில் ஆர்வம் கொண்ட நடிகர் அஜித் குமார், தனது கனவு காராகக் கருதிய மெக்லாரன் சென்னா என்ற அபரிமித விலையுள்ள ஸ்பெஷல் எடிசன் காரை சமீபத்தில் வாங்கியுள்ளார். இந்த பிரீமியம் கார் உலகம் முழுவதும் 500 பேர் மட்டுமே வாங்கியிருப்பதாக கூறப்படுகிறது.

நடிகர் அஜித் கார் ஆர்வலர் என்பதையும், பல பிரீமியம் வாகனங்களை தனது கார் சேகரிப்பில் சேர்த்திருப்பதையும் ரசிகர்கள் அறிவர். ஃபெராரி, போர்ஷே போன்ற விலையுயர்ந்த கார்களை கடந்தகாலங்களில் வாங்கிய அவர், தற்போது தனக்கே சிறப்பான மெக்லாரன் சென்னா காரை வாங்கியுள்ளார். இந்த கார், பிரபல பார்முலா-1 பந்தய வீரர் அயர்டன் சென்னாவின் நினைவாக உருவாக்கப்பட்டது. அவரே நடிகர் அஜித்தின் கார் ரேஸிங் குருவாகவும், ரோல் மாடலாகவும் உள்ளார். அண்மையில் அயர்டன் சென்னாவின் நினைவுச்சிலைக்கு முன்னால் வந்து கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்திய அஜித்தின் வீடியோ சமூக வலைதளங்களில் பரவலாக வைரலானது.

அயர்டன் சென்னாவின் மீது உள்ள மரியாதையினை காட்டும் விதமாகவே இந்த காரை நடிகர் அஜித் வாங்கியுள்ளார். இது அவரது கார் சாகசத்தில் ஒரு முக்கியமான புதையல் என்று ரசிகர்கள் பாராட்டுகின்றனர்.

# விரலில் சிப் பொருத்தி பணம் செலுத்திய பெண் டிஜிட்டல் உலகத்தில் புதிய பரிணாமம்!



தொழில்நுட்ப வளர்ச்சி நாளுக்கு நாள் வேகமாக முன்னேறி வருகின்ற நிலையில், மனித வாழ்க்கையின் பல பரிமாணங்களும் முழுமையாக டிஜிட்டலாக மாறியுள்ளன. சில்லறைக் கடைகள் முதல் வங்கிப் பரிவர்த்தனைகள், ஷாப்பிங் மால்கள் வரை யுபிஐ உள்ளிட்ட ரொக்கமற்ற பரிவர்த்தனைமுறைகள்எல்லா இடங்களிலும் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சமூக வலைதளங்களில்வேகமாக வைரலாக பரவி வரும் ஒரு வீடியோ, டிஜிட்டல் தொழில்நுட்பம் எவ்வளவு முன்னேறியுள்ளதென வெளிச்சம் வீசுகிறது. அந்த வீடியோவில், ஒரு பெண் தனது விரலில் பொருத்தப்பட்ட சிறிய மைக்ரோ சிப் மூலமாக நேரடியாகபணம்செலுத்தும் காட்சி இடம்பெற்றுள்ளது.

இந்த வீடியோ, @ beConjuror என்ற இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிடப்பட்டிருக்கிறது. அதில் காணப்படுவதாவது, அந்த பெண் தனது விரலில் பொருத்திய மைக்ரோசிப்பை பிஓஎஸ் இயந்திரத்தில் ஸ்கேன் செய்யும் போதே, பரிவர்த்தனை ஒரே நிமிடத்தில்நடைபெறுகிறது. தற்போது இந்த வீடியோக்கு 3,000-க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் உள்ளனர்.

இந்தகண்டுபிடிப்புசமூக வலைதளங்களில்பரவலான விவாதத்துக்குரியதாகவும் மாறியுள்ளது. "இந்த தொழில்நுட்பம் இந்தியாவில் இன்னும் வரவில்லை... வந்தால் என்னவாகும்?" என்கிறார் ஒருவர். மற்றொருவர், "இது மனிதன் எவ்வளவு முன்னேறிவிட்டான் என்பதற்கான மிகச் சிறந்த எடுத்துக்காட்டு" எனக் கூறுகிறார்.

அதே நேரத்தில், "மனித உணர்வுகள் நாள்தோறும் இயந்திரங்களைப் போல மாறிவருகின்றன" என்ற விமர்சனமும்எழுந்துள்ளது. தொழில்நுட்ப நிபுணர்கள், இத்தகைய சிப்கள் ஒரு பக்கம் வசதியை வழங்கினாலும், தனிப்பட்ட தரவுகள் மற்றும் பாதுகாப்பு மீதான சிக்கல்களை ஏற்படுத்தும் அபாயம் இருக்கக்கூடும் என்றும் எச்சரிக்கின்றனர்.

இது தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஒரு புதிய பரிமாணமாக பரிசீலிக்கப்படுகிறது. விரலால் பணம் செலுத்தும் வசதி எதிர்காலத்தில் எவ்வாறு செயல்படும் என்பதை காலமே தீர்மானிக்கும்.



# ‘பெயர் சொல்லி கூப்பிட்டா எங்க மாடுகள் ஓடி வரும்’

## நாட்டு மாடுகள் பற்றி ஆச்சரிய தகவல்களை சொன்ன அம்ருத் நிறுவன உரிமையாளர் கே.ராஜேஷ்

Amrudh ORGANICS for healthy living...

தி கோவை ஹெரால்டு



கோவை மலுமிச்சம்பட்டியில் அம்ருத் ஆர்கானிக் நிறுவனம் இயங்கி வருகிறது. இந்த நிறு வனத்துக்கு சொந்தமான பண்ணையில் கிர் மற்றும் காங்ரேஜ் போன்ற இந்திய பூர்வீக பசுக்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த பசுக்களுக்கு தரமான இயற்கை தீவனங்கள் வழங்கப்படுகினறன. சுகதாரமான முறையில் ஆரோக்கியமாக வளர்க்கப்படுகின்றன. இயற்கையான முறையில் இங்கு ஏ 2 ரக பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த பால் மற்ற பாலை ஒப்பிடுகையில் அதிக சத்து கொண்டது. பூர்வீக பசுக்களில் இருந்து மட்டுமே இத்தகைய சத்தான பால் கிடைக்கிறது. பால் உற்பத்தியில் பழங்கால தொழில்நுட்பத்தை பின்பற்றுவதும் பாரம்பரியத்தை பாதுகாப்பதும் அம்ருத் பண்ணையின் மற்றொரு சிறப்பம்சம் ஆகும். அனைத்து வயது மக்களுக்கும் இந்த பால் ஆரோக்கியமானது. தாய்ப்பாலில் இருக்கும் நியூட்ரிசன்கள், புரோட்டின்கள் இந்த பாலில் அடங்கியிருக்கின்றன. இதனால், உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்கிறது. ஒமேகா3 சத்து இந்த பாலில் இருப்பதால் உடலில் சேரும் கொழுப்பை கரைக்கவும் இந்த பால் உதவுகிறது.

அதே போல, அம்ருத் நிறுவனத்தால் நெய் கைப்பட பராம்பரிய முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இந்த நெய்யில் உயர்தர நியூட்ரிசன்கள் உள்ளன. இதனால், இதயத்துக்கு மிகுந்த பயன் அளிக்கிறது. சருமத்தை பளபளக்க செய்கிறது. ஜீரணத்துக்கு உதவுவதோடு, நினைவாற்றலையும் அதிகரிக்க செய்கிறது. நோயெதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது. அம்ருத் நிறுவனம் வெண்ணெய் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளது. இது, ஊட்டச்சத்து மிக்கதோடு, சுவையும் அலாதியானது. அம்ருத் நெய் 100 மி.லி, 250 மி.லி மற்றும் 500 மி.லி பாட்டில்களில் கிடைக்கிறது. மக்கள் தங்கள் தேவைக்கேற்ப வெண்ணையை வாங்கி பயன்படுத்திக் கொள்ள முடியும். அம்ருத் ஆர்கானிக் பால் பண்ணையை தொடங்கியுள்ள ராஜேஷ், இவர் கடந்த 17 ஆடுகளாக ஏற்மதி நிறுவனம் நடத்தி வருகிறார்.

மேலும் ராஜேஷ் நாட்டு மாடுகள் பற்றி பேசிய போது, ‘கடந்த 2021 மலுமிச்சம்பட்டியில் பண்ணையை தொடங்கினோம். இப்போது, மொத்தம் 50 நாட்டு மாடுகள் கன்றுகள் உள்ளன . காலை மாலை இருவேளையும் சேர்ந்து 100 லிட்டர் உற்பத்தியாகிறது. நாள் ஒன்றுக்கு 400 லிட்டர் வரை பால் உற்பத்தி செய்யும் முயற்சியில் ஈடு பட்டுள்ளோம். முதல்ல இந்த பண்ணையை தொடங்க ஒரு முக்கிய காரணம் உள்ளது. என்னோட தாயாருக்கு கால்சியம் குறைபாடு இருந்தது. அவருக்கு நிறைய பால் கொடுக்க மருத்துவர்கள் சொன்னார்கள். தேவையான பால் வாங்கி அவருக்கு கொடுத்தோம். ஆனாலும், முடிவில் கேன்சர் வந்து விட்டது. அவங்க இறந்ததுக்கு அப்புறம்தான் தெரிந்தது. நாங்க கொடுத்த ஜெர்சி பசு போன்ற மாடு களில் இருந்து கறக்கப்படும் ஏ1 பால் என்பது. இந்த பாலில் உள்ள ஏஒன் பீட்டா கேசின் ரக புரோட்டீன் ஜீரணமாகாது.

ஆனால், நாட்டு மாட்டு பாலில் ஏ2 டைப் பீட்டா கேசின் உள்ளது. இது தாய்ப்பாலில் உள்ள புரோட்டீன் நிறைந்தது. இதனால்தான், குழந்தைகளுக்கு நாட்டுப்பால் கொடுப்பது ரொம்ப நல்லது. இதையடுத்தே, நான் நாட்டுப்பால் வாங்கி எனது மகனுக்கு கொடுக்க தொடங்கினேன். முதலில் அவனுக்கு அடிக்கடி காய்ச்சல், சளி பிடித்து கொண்டிருந்தது என் மகனுக்கு. நாட்டுபால் கொடுக்க தொடங்கியதும் உடல் நலம் நன்றாக தேறி விட்டான். தொடர்ந்து, மற்ற குழந்தைகளும் பலன் பெறனும் என்னும் நோக்கத்தில் நான் நாட்டுபால் பண்ணையை தொடங்கினேன். நம்ம நாட்டில் 80 ரக நாட்டு மாடுகள் உள்ளன. அவற்றில் காங்க்ரேஜ், கிர் போன்றவை அதிக பால் தரக் கூடியவை. இவற்றிலுள்ள திமில்கள் சூரியனிடம் இருந்து சக்தியை பெற்று ஆரோக்கியமான பாலை தர மாடுகளுக்கு உதவுகின்றது.

இதனால், இந்த மாடுகளை குஜராத் சென்றும் நேரடியாக அதன் பரம்பரையை ஆராய்ந்து வாங்கி வந்தோம். மாடுகள் நல்ல பாலை கொடுக்க வேண்டுமென்றால் சத்தான உணவு அவசியம். இதனால், புண்ணாக்கு, சோளம் , புற்கள் போன்ற அடர்தீவனம் கொடுக்கிறோம். தற்போது, மாடுகளை வளர்க்க செட்டிப் பாளையத்தில் 10 ஏக்கர் பரப் பளவில் நிலத்தை வாங்கியுள் ளோம். பல ஆண்டுகளாக விவ சாயமே நடக்காத நிலத்தை வாங்கியுள்ளோம். இதற்கு காரணம் கெமிக்கல் இல்லாத மண் வேண்டும் என்பதுதான். இந்த நிலத்தில் சத்தான காய்கறிகள், புற்கள், நவதானியங்கள் பயிரிட்டுள்ளோம். மாடுகள் இயற்கையாக சென்று மேய்ந்து வரும் வகையில் பண்ணையை ஏற்படுத்தியுள்ளோம்.




மாடுகளை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். அப்போதுதான், நன்றாக பால் சுரக்கும். அதனால், முதலில் கன்றுகள் எவ்வளவு குடிக்கிறதோ, அது குடித்து முடிந்ததும்தான் பால் கரப்போம். மெஷின் பயன்படுத்துவதில்லை. இயற்கையாகவே பால் கரக்கிறோம். தற்போது, பாலில் இருந்து நெய், வெண்ணைய் தயாரிக்கிறோம். அதோடு, பஞ்சகவ்யம் போன்றவையுட்த தயாரித்து விற்கிறோம். நெய் சாப்பிடுவது உடலுக்கு மிகவும் நல்லது. தினமும் நெய் சாப்பிட வேண்டும். நெய் தொடர்ந்து சாப்பிட்டால் நினைவாற்றல் பெருகும். முதுகு வலி கூட குணமடைய வாய்ப்புள்ளது. அதே போல, பஞ்சகவ்யம் செடிகளுக்கு உரமாக போடலாம். நாட்டு மாடு சாணத்தை காய வைத்து, சாம்பிராணி, கற்புரம், நெய் ஊற்றி எரித்து வீட்டுக்குள் புகை விட்டால் அது ஹோமம் நடத்துவதற்கு சமம். வீட்டில் பாசிடிவ் எனர்ஜியே ஏற்பட்டு விடும்.

பசுக்கள் வருசம் ஒரு கன்று போடனும். இதற்காக, அந்த அந்த இன காளைகளும் எங்களிடம் உள்ளன. ஒரு காலமும் கிராஸ்பீரிட் ஏற்படுத்த கூடாது. நாட்டு மாட்டு பண்ணைகளை லாபக்கரமான முறையில் நடத்தலாம். நல்ல இயற்கையான பொருட்களுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். இதனால், நாட்டு மாடுகளை பெருக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். எங்கள் பண்ணைக்கு யார் வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் போன் செய்து விட்டு வந்து பார்வையிடலாம். நாட்டு மாடுகளை வளர்க்க ஆசைப்பட்டால் நாங்களே எங்கள் மாடுகளை கொடுக்கிறோம். அவர்களுக்கு மாடு வளர்க்க பயிற்சி அளிக்கிறோம். லோன் வாங்கவும் வழிகாட்டுகிறோம். உண்மையில், இந்த மாடுகள் அவ் வளவு அறிவார்ந்தவை. எங்களிடமுள்ள ஒவ்வொரு மாட்டுக் கும் ஒரு பெயர் உள்ளது. பெயர் சொல்லி கூப்பிட்டா, உடனே ஓடி வரும். இப்போதுள்ள 50 மாடுகளை 200 மாடுகளாக உயர்த்த வேண்டும். ஊரெல்லாம் பால் சப்ளை செய்து ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க வேண்டும். நாட்டு மாட்டு பண்ணைகளுக்கு என்று தனியாக ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்த வேண்டும். இதுவே என் லட்சியம் ‘என்கிறார்.



**அம்ருத் ஆர்கானிக் நிறுவனத்தை இந்த எண்களில் தொடர்பு கொள்ளலாம்- 7530049267, 7539948908.**

# மின் மயானத்தில் மேற்கூறை நீர் கசிவு

### ஆய்வு செய்த எம்எல்ஏ கே.ஆர்.ஜெயராம்




கோவை மாநகராட்சி நஞ்சுண்டாபுரம் மின் மயானம் மேற்கூரைகள் பராமரிப்பு இன்றி, கடந்த ஒரு வருட காலமாக நீர் கசிவுகள் ஏற்பட்டு, அங்கு அமைக்கப்பட்டுள்ள மின் சாதனங்கள் மற்றும் எரியூட்டு கருவிகள் மீதும் மழைநீர் விழுந்து மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. இது தொடர்பாக சிந்தாநல்லூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே ஆர் ஜெயராமிடம் அப்பகுதி மக்கள் முறையிட்டனர் . இதனையடுத்து பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர்.ஜெயராம் நேரில் சென்று ஆய்வு செய்து இதற்கான பணிகளை கோவை மாநகராட்சி ஆணையரிடம் கூறி நடவடிக்கை எடுப்பதாக கூறியுள்ளார். மேலும் அவர்கள் எடுக்கவில்லை என்றால் சட்டமன்ற நிதியிலிருந்து அதற்கான பணியை தொடங்குவேன் என்றார். உடன் முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள் சந்திரசேகர், ஆர் எஸ் திருமுகம் மற்றும் பொதுமக்கள் உடன் இருந்தனர்

# வீடு விலை ரூ.703 கோடி;

### அசர வைத்த மும்பை பெண் தொழிலதிபர்

தி கோவை ஹெரால்டு

மும்பையில் பெண் தொழிலதிபர் ஒருவர் பல கோடி மதிப்பில் வாங்கியுள்ள குடியிருப்பு கட்டிடத்தின் விலை பலரது கவனத்தை ஈர்த்துள்ளது.

லீனா காந்தி திவாரி என்பவர் USV லிமிடெட்டின் தலைவரான உள்ளார். இந்நிறுவனத்தை இவரது தந்தை விட்டல் காந்தி 1961-ல் தொடங்கினார். அவரது மறைவைத் தொடர்ந்து நிறுவனத்தின் பொறுப்புக்களை லீனா திவாரி ஏற்றார். இவரது தற்போதைய நிகர சொத்து மதிப்பு கிட்டத்தட்ட 25 ஆயிரம் கோடி ஆகும்.

இவர் சமீபத்தில் மும்பை வோர்லி பகுதியில் கடல் நோக்கிக் கட்டப்படும் நமன் சானா கட்டிடத்தில் 32 முதல் 35வது தளம் வரை அமைந்துள்ள குடியிருப்பை வாங்கியுள்ளார். 22,572 சதுர அடி பரப்பளவு கொண்ட இதன் விலை ரூ.639 கோடியாகும். சது அடி ரூ.2.83 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பத்திர ப்பதிவிற்கான வரி மட்டும் ரூ.63.9 கோடியாகும். ஆக மொத்தம் ரூ.703 கோடி செலவு செய்து இதனை அவர் வாங்கியுள்ளார்.



மும்பை மாதிரியான மக்கள் அடர்த்தி அதிகம் கொண்ட நகரத்தில் குடியிருப்பு கட்டிடங்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

விலை அதிகரித்த போதிலும் பிரபலங்கள், தொழிலதிபர்கள் விலையுயர்ந்த குடியிருப்புகளை வாங்க முனைப்புக்காட்டி வருவது தொடர்ந்த வண்ணமே உள்ளது.

உதாரணமாக சில காலம் முன்னர் கோடாக் மஹிந்திரா வங்கியின் நிறுவனர் உதய் கோடக் மற்றும் அவரது குடும்பத்தினர் அடுக்குமாடி கட்டி டத்தில் ஒரு சொகுசு குடியிருப்பை வாங்கி யுள்ளனர். அதன் விலை ரூ.400 கோடி ஆகும்.

### கோவை இளைஞர் வெள்ளியங்கிரி மலையை

# 101 நாட்கள் தொடர்ந்து ஏறி சாதனை

தி கோவை ஹெரால்டு

கோவையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், வெள்ளியங்கிரி மலைத் தொடரை தொடர்ந்து 101 நாட்களாக ஏறி, புதிய சாதனை பதிவு செய்துள்ளார். இந்த சாதனையின் மூலம் இளைஞர்கள் உடல் நலத்திற்கும், போதை பொருட்களிலிருந்து விலகுவதற்குமான விழிப்புணர்வையும் ஏற்படுத்தவே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

மேற்கு தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாக விளங்கும் வெள்ளியங்கிரி மலை, கோவை மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஏழு மலைகளைக் கொண்ட இந்த மலைத் தொடரில் ஏழாவது மலை சுயம்புவாக சிவபெருமான் எழுந்தருளியதாக நம்பப்படும் காரணத்தால், இது “தென் கயிலாயம்” என்றும் அழைக்கப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 6000 அடி உயரத்தில் அமைந்துள்ள இம்மலை, பக்தர்களும் பயணிகளும் கடின முயற்சியுடன் அடைய வேண்டிய புனிதத்தலம் ஆகும்.



இந்த மலைத்தொடரை தொடர்ந்து 108 முறை ஏறுவதன் மூலம் உலக சாதனை புரிவதற்காக, கோவையைச் சேர்ந்த மலையேற்ற பயிற்சியாளர் ஹரி கடந்த பிப்ரவரி மாதம் தனது பயணத்தைத் தொடங்கினார். பக்தர்களுக்கான அனுமதி துவங்கிய நாளிலிருந்து இன்று வரை, ஹரி தினமும் சுமார் 6 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள ஏழு மலைகளையும் ஏறி இறங்கி வருகிறார். தற்போது 101வது நாளாக வெள்ளியங்கிரியை வெற்றிகரமாக ஏறி இறங்கி உள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய ஹரி, “இப்போது இளைஞர்கள் அதிக அளவில் போதைப்பொருட்களில் ஈடுபடுகின்றனர். அவர்களை அதிலிருந்து விலக்கி, உடல் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை புரியவைக்கும் வகையில் இந்த முயற்சியை எடுத்துள்ளேன்,” என்றார்.

“சாதாரணமாக இம்மலையை ஏறி இறங்க 6 மணி நேரம் தேவைப்படும். ஆனால் நான் சுமார் 2 மணி நேரத்திலேயே ஏறி இறங்குகிறேன்,” என்றும் கூறினார். மலையினை ஏறுவது எளிதாக இருந்தாலும், இறங்குவது சவாலாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

ஹரியின் இந்த தொடர்ச்சியான 101 நாள் மலையேற்ற சாதனை, சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களில் பெருமளவில் பாராட்டுப் பெறும் நிலையில், அவரது அர்ப்பணிப்பு மற்றும் நோக்கம் இளைஞர்களிடையே மனமாற்றத்தை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கைது செய்யப்பட்ட விராட் கோலியின் நண்பர்... யார் இந்த நிகில் சோசால் யார்?

ஐ.பி.எல் தொடரில் கோப்பையை ஆர்.சி.பி அணி வென்றதால் பெங்களூருவில் நடந்த பிரமாண்ட ஊர்வலத்தில் லட்சக்கணக்கான ரசிகர்கள் திரண்டனர். அப்போது, ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரத்தில் ஆர்.சி.பி அணியின் மார்க்கெட்டிங் துறை தலைவர் நிகில் ஷோஷாலே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர், கடந்த 2012ம் ஆண்டு முதல் ஆர்.சி.பி அணியுடன் நிகில் பணியாற்றி வந்தார். பல துறைகளில் பணியாற்றி விட்டு தற்போது, மார்க்கெட்டிங் மற்றும் வருவாய் துறை தலைவராக உள்ளார். முன்னதாக, ஆர்.சி.பி அணியின் உரிமையாளரான டியாகோ இந்தியா நிறுவனத்தில் பணியாற்றினார். டியாகோ இந்தியா நிறுவனம்தான் விஜய் மல்லையாவின் யுனைடெட் புருவரீஸ் நிறுவனத்தை வாங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கர்நாடக முதல்வர் சித்தராமையாவின் உத்தரவையடுத்து, கடந்த 6ம் தேதி காலை 6.30 மணிக்கு மும்பை செல்ல கெம்பேகவுடா விமான நிலையத்துக்கு அவர் வந்த போது போலீசார் கைது செய்தனர். அதேபோல, பேரணிக்கு ஏற்பாடு செய்த டி.என்.ஏ என்டர்டிடெயின்ட்மென்ட் நிறுவனத்தை சேர்ந்த 3 அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நிகில் விராட் கோலி, அனுஷ்காவுடன் நெருங்கிய நட்பு கொண்டவர். மைதானத்தில் அனுஷ்காவுடன் பாக்ஸ் அறையில் இருந்து கிரிக்கெட் பார்ப்பவர். விராட் கோலி இவரை, இன்ஸ்டாவில் பின்தொடரவும் செய்கிறார். அனுஷ்கா ஷர்மாவும் நிகிலின் மனைவி மாளவிகா நாயக்கும் நெருங்கிய தோழிகள். இருவரும் ஆர்.சி.பி விளையாடும் முக்கிய போட்டிகளை ஒன்றாக அமர்ந்து பார்ப்பதை வாடிக்கையாக கொண்டவர்கள்.

இந்த நிலையில், இந்த விவகாரத்தில் கர்நாடக மாநில பாரதிய ஜனதா கட்சி ஆளும் காங்கிரஸ் கட்சியை கடுமையாக விமர்சித்துள்ளது. பெங்களூரு மாநகர போலீஸ் கமிஷனர் தயானாந்த் சஸ்பெண்ட் செய்யப்பட்ட விவாகரத்தையடுத்து, போலீஸ் துறையினர் மீது காங்கிரஸ் அரசு நடத்தும் தாக்குதல் என்றும் பாரதிய ஜனதா கட்சி எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami.